236

OF BOOKS
11 JAN 1955
MADRAS

# தெய்வத் தமிழ் வாசகம்

## மூன்றும் வகுப்பு

236
1-55



T3
031 (3)
N55

...டேசன் அண்டு கம்பெனி,
...கெட், சென்னை-3

# தெய்வத் தமிழ் வாசகம்

## மூன்றும் புத்தகம்

### மூன்றும் வகுப்பு

OFFICE OF ... OF BOOKS
11 JAN 1955

ஆசிரியர் :
**வித்துவான் ஐ. நடேசப்பிள்ளை**
பொன்னேரி,

திருத்தி அமைத்தவர் :
**வித்துவான் இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா**
தமிழாசிரியர்,
சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் ஸ்கூல், சென்னை-10.

**V. C. வேங்கடேசன் கம்பெனி**
**மூர்மார்கெட்டு, சென்னை-3**

பதிப்புரிமை]  1954  [விலை அணு 0-7-0

First Edition 1939
Revised Edition 1954

சென்னை-600 008.
13375

ராயன் அச்சகம், சென்னை-1.

# முன்னுரை

தெய்வத் தமிழ் வாசகம் என்னும் இப்பாட புத்தக வரிசை (கல்வி இலாக்கா அதிகாரிகளால் 1939ல் புதிதாக அமைக்கப்பட்ட) ஆரம்பப் பாடசாலைப் பாடத் திட்ட முறையை முழுவதும் பின் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இது மூன்றும் வகுப்புச் சிறுவர்களுக்குரிய மூன்றும் புத்தகமாகும்.

இம்மூன்றும் புத்தகம் மாணவர்களின் பருவத்திற் கேற்றவாறு தெரிந்த, பேச்சில் உபயோகப்படுகிற மொழிகளைக் கற்பிக்கக் கருவியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் படித்து முடித்த மாணவன் சுமார் 500 புதிய மொழிகளையும் அவைகளடங்கிய சிறு வாக்கியங்களையும் படங்களின் மூலமாகவும் சம்பாஷணை மூலமாகவும் பயிற்சிகள் மூலமாகவும் எழுதவும் படிக்கவும் கற்றவனுவான்.

இப்புத்தகத்தைக் கண்ணுறுவோர், இது பள்ளியாசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் இன்றியமையாததாயிருக்குமென்பதைச் செவ்விதின் உணர்வார்கள். ஆகவே, கல்வியதிகாரிகளும் பாடசாலைத் தலைவர்களும் இதற்கு ஆதரவு அளித்து என்னைப் பின்னும் ஊக்குவார்களென நம்புகிறேன்.

எல்லாம் வல்ல இறைவனுடைய இணையடிகளுக்கு இவைகளை அருச்சிக்கும் என் கடன் பணி செய்து கிடப்பதே,

ஐ. நடேசன்,
தமிழாசிரியன்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தெய்வம் உண்டு | ... 1 |
| | பயிற்சி—1—4 | 5–8 |
| 2. | எறும்பு | ... 9 |
| 3. | உழவுத் தொழில் | ... 11 |
| 4. | மைனுவும் முயலும் | ... 17 |
| 5. | ஞானசம்பந்தர் | ... 20 |
| 6. | நாட்டுப்பாட்டு | ... 24 |
| 7. | யானை | ... 25 |
| 8. | அதிகமான் | ... 29 |
| 9. | பாப்பாப் பாட்டு | ... 33 |
| 10. | காக்கையும் குடமும் | ... 34 |
| 11. | பெயர்ச்சொல் | ... 36 |
| 12. | ஊரைக் காத்த உத்தமன் | .... 39 |
| 13. | உண்மை நண்பன் யார் ? | ... 43 |
| 14. | ஔவையார் | .... 44 |
| 15. | எண் | ... 48 |
| 16. | மயில் | ... 51 |
| 17. | ராஜா தேசிங்கு | ... 55 |
| 18. | வினைச்சொல் | ... 60 |
| 19. | கரும்பும் சர்க்கரையும் | ... 62 |
| 20. | மீன் | .... 67 |
| 21. | காலம் | ... 70 |
| 22. | திறமையுள்ள நாய் | ... 72 |
| 23. | நல்ல கள்ளன் | ... 76 |
| 24. | சீனர்கள் | ... 81 |
| 25. | பரதன் | ... 86 |
| 26. | புகை வண்டி | .... 89 |
| | **செய்யுட்பகுதி** | |
| | 1. ஆத்தி சூடி | .... 95 |
| | 2. கொன்றை வேந்தன் | ... 97 |
| | 3. உலக நீதி | ... 98 |
| | 4. பழமொழிகள் | ... 99 |
| | செய்யுட்குறிப்புரை | .... 100 |

# தெய்வத் தமிழ் வாசகம்

## மூன்றும் புத்தகம்



### 1. தெய்வம் உண்டு.

1. ஒரு சிறு ஊரில் குருவன் என்பவன் வசித்து வந்தான். அவனுக்குப் படிப்புத் தெரியாது. ஆனாலும், அவனுக்கு மிகுந்த அறிவு உண்டு. எதையும் தீர யோசிப்பான். அவனை ஏமாற்ற எவராலும் முடியாது. அவன் எப்போதும் எதைப்பற்றியாவது ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பான்.

2. குருவனுக்கு இளமை முதல் ஒரு பெரிய சந்தேகம் உண்டு. அது என்ன? 'தெய்-வம் என்கிறார்களே! அது எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது?' என்னும் ஐயந்தான். குருவன் தன் ஐயத்தைப் பலரிடம் சொல்-வான். அவர்கள், "கடவுள் உண்டு. அவர் இல்லாத இடமே இல்லை. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். அவரன்றி ஓர் அணுவும் அசையாது," என்பார்கள்.

3. யார் எப்படிச் சொன்னாலும் குருவ-னுடைய ஐயம் ஒழியவில்லை. 'கடவுள் இருந்-தால், கண்ணுக்குத் தெரியவேண்டுமே! கண்-ணுக்குத் தெரியாத பொருளை இருக்கிறது என்று எப்படி நம்புவது?' என்று மேலும் ஐயம் வளர்ந்தது. அந்த எண்ணம் அவன் மனத்தில் குடிகொண்டது.

4. ஒரு நாள் குருவன் ஓர் ஊருக்குப் போனான். நடுவழியில் கொஞ்ச நேரம் தங்க நேர்ந்தது. அவன் ஓர் ஆலமர நிழலில் தங்கி-னான். பக்கத்தில் ஒரு குளமும் இருந்தது. அதில் இறங்கிக் கட்டுச் சோறு உண்டான்; திரும்பி வந்து மர நிழலில் படுத்தான்.

5. படுத்திருந்த குருவனுக்குப் பக்கத்தில் ஓர் ஆலம்பழம் விழுந்தது. அதை அவன் கையில் எடுத்தான். அவன் ஆராய்ச்சி செய்யத்

தொடங்கினன். "இந்தப் பழம் எதில் பழுத்தது? மரத்தில் பழுத்தது. மரம் எப்படி முளைத்தது? விதையிலிருந்து முளைத்தது. விதை எப்படிக் கிடைத்தது? விதை பழத்திலிருந்து கிடைத்தது. அப்படியானல் விதை முன்னே உண்டாயிற்ரு, மரம் முன்னே உண்டாயிற்ரு?'' என்று வெகு நேரம் யோசித்தான்.

6. அப்போதுதான் அவன் ஐயம் ஒழிந்தது. "மரத்தையோ, விதையையோ முதலில் ஒருவர் உண்டாக்கியிருக்க வேண்டும். அவர்தாம் கடவுளாய் இருக்க வேண்டும். இது உண்மைதான்,'' என்று திடமாக உணர்ந்துகொண்டான்.

7. "இப்பெரிய மரத்தின் பழம் எவ்வளவு சிறியது! இப்பழம் பூசனிக்காய் அளவு பெரியதாய் இருந்தால், இது தலையில் விழுந்தால் என்னவாகும்? கடவுள் படைப்பின் திறமையே திறமை!'' என்று வியந்தான்.

| | | |
|---|---|---|
| தெய்வம் | ஐயம் | ஆராய்ச்சி |
| அறிவு | அணு | தொடங்கினன் |
| தீர | குடிகொண்டது | முளைத்து |
| ஏமாற்ற | நிழல் | யோசித்தான் |
| சந்தேகம் | கட்டுச் சோறு | திடமாக |
| படைப்பு | திறமை | வியந்தான் |

**பயிற்சி:**

**விளக்கம்** :—ஊர் + இல் = ஊரில், எது + ஐ + உம் = எதையும், எது + உம் = எதுவும். எங்கு + உம் = எங்கும்.

சொன்னால்+உம்=சொன்னாலும், எ+படி=எப்படி. கொஞ்சம்+நேரம் = கொஞ்சநேரம். கை + இல் = கையில்.

**பிரித்து எழுது :**

ஐயந்தான், நிறைந்திருக்கிறார், குருவனுடைய, மரநிழல், திடமாக.

**சேர்த்து எழுது :**

ஒழிய இல்லை, இருக்கிறது என்று, மனத்து இல், படுத்து இருந்த, அப்படி ஆனால், உண்டு ஆயிற்று.

**வேறு மொழி கூறு :**

படிப்பு, ஆராய்ச்சி, என்று, பின்பு, தெய்வம்.

**ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு தொடரில் சேர்த்து எழுது :**

படிப்பு, ஏமாற்ற, இல்லாமல், எப்படி, தொடங்கினான்.

## கேள்விகள் :

1. குருவனுடைய சந்தேகம் யாது ?
2. மரம் எதிலிருந்து உண்டாயிற்று ?
3. விதை எதிலிருந்து உண்டாயிற்று ?
4. கடவுள் உண்டு என்பது எப்படித் தெரிகிறது?

## பயிற்சி—1

கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் எழுது :—

1. முருகன் வேலை செய்கிருன்.

| | |
|---|---|
| வள்ளி பாட்டு———. | (பாடு) |
| மனிதர்கள் ———. | (வாசி) |
| மாடு புல்லை———. | (தின்) |
| வாத்துகள் நீரில்———. | (நீந்து) |
| தகப்பனுர்பணம்———. | (சம்பாதி) |

2. வள்ளி பாடம் படிக்கிருள்.

———தெருவில் போடுகிருர்கள்.

———வண்டியை இழுக்கிறது.

———வண்டியைச் செய்கிருன்.

———பால் தருகின்றன.

——— பாடம் கற்பிக்கிருர்.

———சாதம் ஊட்டுகிருர்.

———கும்மி அடிக்கிருர்கள்.

———இலங்கைக்குப் போனுர்கள்.

## பயிற்சி—2

கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் எழுது :—

1. நான் வேலை செய்கிறேன்.

   நான் பாடம்———.

   நாங்கள் கணக்குப்———.

   நீ பாட்டு———.

   நீர் உண்மை———.

   நீங்கள் தருமம்———.

   அவன் ஏர்———.

   மாடுகள் வயலில்———.

   பொன்னி சமையல்———.

   மனிதர் வேடிக்கை———.

   பூ அழகாய்———.

2. நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

   ———வேலை செய்கிறாய்.

   ———மெய் பேசுவோம்.

   ———வீட்டுக்குப் போகிறோம்.

   ———பாடம் படிக்கிறீர்.

   ———பாட்டுப் பாடுகிறீர்கள்.

## பயிற்சி—3

**கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் எழுது :—**

கந்தன் புத்தகம்——.

முருகன் புத்தகத்தை——.

புத்தகத்தைக் கையால்——.

முத்தன் என்னோடு——.

அழகப்பன் முருகனுக்கு——.

தம்பி ஊரிலிருந்து——.

முருகனது எருது——.

பெட்டியில் பணம்——.

நமக்கு——நிழல் தருகிறது.

விறகு வெட்டி——வெட்டுகிறான்.

நாற்காலி——செய்யப்படும்.

——தண்ணீர் விடவேண்டும்.

பழம்——உதிர்ந்தது.

——வேர் பூமிக்குள் இருக்கும்.

காய்——காய்க்கிறது.

வயலில்——விளைகிறது.

## பயிற்சி—4

நான் நேற்றுப் போனேன்.
நான் இப்போது போகிறேன்.
நான் நாளைக்குப் போவேன்.
நீ முன்பு பார்த்தாய்.
நீ இப்போது பார்க்கிறாய்.
அவன் சென்ற மாதம் வந்தான்.
அவன் இவ்வேளை வருகிறான்.
அவன் அடுத்த நாள் வருவான்.

**கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் எழுது:—**

முன் காலத்தில் ஓர் அரசன் ——.
கடவுள் எங்கும் ——.
நாளைக்கு நான் ஊருக்குப்——.
நான் இப்போது ஆற்றுக்குப்——.
நேற்று நீ எங்கே——?
முன் ஒரு நாள் சென்னைக்குப்——.
நீ இப்போது எங்கிருந்து——?
நீ எப்போது ஊருக்குப்——?
என் நண்பன் நாளைக்குத்தான்——.

# 2. எறும்பு

சிறுவனே ! சிறுவனே ! சிற்றெறும் பைப்பார் !
பொறுமையும் உழைப்பும் பொருந்திய எறும்பது.
எப்பொழு தும்அது ஏற்றமாய் உழைத்தே
தப்பிலா வழியில் தகுதியாய் வாழும் :
மழைக்கா லத்தை மனத்தில் எண்ணி
உழைப்பை நினையாது உணவைத் தேடிச்
சேர்த்து வைக்கும் சிறப்பினைப் பார்!பார் !
எறும்புக ளெல்லாம் எங்கும் சேர்ந்தே
குறும்புசெய் சிறுவரைக் கோபிப் பதுபோல்
கடிக்கும் பாவனை காட்டிச் செல்லும் :
வரிசையாய்ச் செல்லும் வகையையும் பார்!பார் !
எவ்வள வழகது ! எவ்வள வழகது !
சுறுசுறுப் பென்பது சிற்றெறும் பிடத்தே
பெறும்ஒரு பாடம், பிள்ளாய் ! அறிவாய்.
எறும்பைப் போல என்றும் உழைத்துப்
பெறத்தகும் சிறப்பெலாம் பெற்றே
வாழநீ முயல வகையறி வாயே.

R. S. சர்மா



| | | | |
|---|---|---|---|
| பொறுமை | சிறப்பு | சுறுசுறுப்பு | பகை |
| மழைக்காலம் | குறும்பு | முயலுதல் | சேர்த்துவை |
| தகுதி | பாவனை | வரிசை | ஏற்றம் |

## பயிற்சி—1

எறும்பு + அது = எறும்பது.

**சேர்த்து எழுது :**

(1) எறும்புகள் + எல்லாம், (2) அழகு + அது,
(3) எவ்வளவு + அழகு, (4) சுறுசுறுப்பு + என்பது.

## பயிற்சி—2

படத்தைப் பார்த்துச் சில வாக்கியங்கள் கூறு; எழுது.

## கேள்விகள் :


1. எறும்பு என்ன செய்யும் ?
2. நாம் எறும்பினிடம் கற்கும் பாடம் என்ன ?
3. எறும்பு என்பதைப் பற்றி ஐந்து வரிகள் எழுது.

# 3. உழவுத் தொழில்

1. உலகில் மக்கள் பல தொழில்களைச் செய்து பிழைக்கிறார்கள். உலகில் மக்கள் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது உணவு. உணவில்லாமல் எவ்வுயிரும் வாழ முடியாது. உணவுக்காகவே மக்கள் பல தொழில்களைச் செய்கிறார்கள். அத்தகைய உணவுப் பொருள்களை விளைவித்துக் கொடுக்கும் தொழில் ஒன்று உண்டு. அதனைப் பயிர்த்தொழில் என்றும், வேளாண்மைத் தொழில் என்றும், உழவுத் தொழில் என்றும், விவசாயத் தொழில் என்றும், கிருஷித் தொழில் என்றும் கூறுவர்.

2. வேளாண்மைத் தொழிலைச் செய்வோர்க்கு உழவர், வேளாளர், விவசாயி என்ற பெயர்கள் உண்டு. அவர்கள் தொழில்தான் உயிருக்கு ஆதாரமாகியதொழில். அவர்கள் தொழில் உபகாரமான தொழில். வேளாண்மைக்கு உபகாரம் என்ற அர்த்தமும் உண்டு. வேளாண்மைத் தொழில் நாட்டில் குறைவுபடுமானால், மக்களும் பிற உயிர்களும் மடிவது திண்ணம். இந்தியா பயிர்த்தொழில் மிக்க நாடு. இந்நாட்டில் பெரும்பாலோர் வேளாண்மைத் தொழிலைச் செய்கிறார்கள்.

3. நீர்வளமும் நிலவளமும் உள்ள நாட்டில் பயிர்த்தொழில் செம்மையாக நடை-


1
2
3
4

பெறும். ஆறுகள், ஏரிகள், குளங்கள் எங்கு அதிகமோ, அங்குப் பயிர்த்தொழில் செம்மையாக நடைபெறும். ஆறுகள் ஓடும் பிரதேசங்களில் மக்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பார்கள்.

4. பயிர்த்தொழில் செய்யப்படும் நிலம் இருவகைப்படும். நன்செய் என்பது வயல். இதற்குக் கழனி, செய் என்ற பெயர்களும் உண்டு. ஆற்றிலிருந்தோ, ஏரி குளங்களிலிருந்தோ நீர் பாய்ச்சிப் பயிர் செய்யும் நிலத்துக்கு நன்செய் என்பது பெயர். புன்செய் என்பது கொல்லை, தோட்டம் என்ற பெயர்களையும் பெறும். மழைநீரும், கிணற்றிலிருந்து இறைக்கப்படும் நீரும் தோட்டப் பயிர்த்தொழிலுக்கு உதவும். நன்செய் நிலத்தை உழுது எருவிட்டு நீர்பாய்ச்சிச் சேறுக்கிப் பயிர் செய்வது வழக்கம். இதைச் **சேடைப்பயிர்** என்பர். நிலத்தில் ஒரு பாகத்தில் விதை விதைத்து நாற்றுக்களை அடர்த்தியாக உண்டாக்கிப் பின் அவற்றைப் பிடுங்கித் தூரம் தூரமாக நடுவார்கள். நாற்று உண்டாகும் இடம் **நாற்றங்கால்** எனப்படும். இவ்வாறு பயிர் செய்வது **நடவு** என்று கூறுவர். விதையைத் தூவிச் சேடை நிலத்தில் பயிர் செய்வதும் உண்டு.

5. புன்செய் நிலத்தினை உழுது எருவிட்டுப் பயிர் செய்வர். உழுது புழுதியாக்கி எரு-

விட்டுக் கலந்து பயிர் செய்வதால் இதற்குப் **புழுதிக்கால்** என்பது பெயர். இந்நிலத்தில் விதைகளை விதைத்துப் பயிர் செய்வர். கிணற்றிலிருந்து நீர் இறைத்தல் வேண்டும்.

6. உழவுத் தொழில் செய்வோர்க்கு வேலை அதிகம்; களை எடுத்தல், நீர்பாய்ச்சல் முதலிய வேலைகள் இருக்கும். நன்செய் நிலத்தில் நெல், கோதுமை, கரும்பு, வாழை, பயறு முதலியன விளையும். புன்செய் நிலத்தில் கம்பு, கேழ்வரகு, எள்ளு, கொள்ளு, கடலை, மொச்சை, அவரை, துவரை, பருத்தி, உளுந்து முதலியனவும், புகையிலை, மிளகாய், காய்கறி முதலியனவும் பயிர் செய்யப்படும்.

7. உழவனுக்கு ஏர், கலப்பை, மண்வெட்டி, கடப்பாரை, அரிவாள், களைக்கொட்டு, பரம்புச் சட்டம், இறைசால், கயிறு, வார் முதலியன வேண்டும். உழவனுக்கு அவன் தொழிலுக்குப் பேருதவியாக இருப்பது மாடு. குடியானவனிடம் ஆடுமாடுகள் இருக்கும். அவற்ருல் எருவும் அவனுக்குக் கிடைக்கின்றது. மாடு உழுவதற்கும், வண்டியிழுப்பதற்கும், நீர் இறைப்பதற்கும் மிகவும் பயன்படுகிறது.

8. உழவர் தொழில் உயர்ந்த தொழில். மற்றவர்கள் தொழில் தொழுதுண்டு வாழும் தொழில். எல்லோர்க்கும் உணவுப் பொருள்-

களைப் பயிரிட்டுக் கொடுக்கும் உழவன் உலகிற்குப் பேருபகாரியாவான். உழவர் தொழில் இல்லாவிடில் அரசும் நிலை குலைந்து-விடும். ஆதலால், நாம் "உழவிற்கும் தொழி-லுக்கும் வந்தனம் செய்வோம்." உழவர்கள் மேன்மையானவர்கள். அவர்களைச் சிறக்க வாழும்படி செய்வது நம் கடமை.

| | | |
|---|---|---|
| தொழில் | ஆதாரம் | பெரும்பாலோர் |
| உயிர் வாழ்க்கை | வந்தனம் | செம்மையாக |
| முக்கியமானது | மடிவது | பிரதேசம் |
| எவ்வுயிரும் | திண்ணம் | தூவி |
| இறைக்கப்படும் | அடர்த்தி | தொழுது |

கேள்விகள் :

1. உழவுத் தொழில் எதனால் முக்கியமானது?
2. உழவுத் தொழிலுக்கு வேறு பெயர்கள் யாவை?
3. உழவுத் தொழில் செய்பவனுக்குள்ள பெயர்கள் யாவை?
4. வேளாண்மை என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன?
5. பயிர்த்தொழில் எங்குச் செம்மையாக நடை-பெறும்?
6. நன்செய், புன்செய்—விளக்கு.
7. சேடைப்பயிர். புழுதிக்கால்—விளக்கு.
8. நன்செய், புன்செய் நிலங்களில் விளைவன யாவை?

9. உழவனுக்குரிய வேலைகளையும் கருவிகளையும் கூறு.

10. உழவுத்தொழில் ஏன் சிறந்தது ?

## பயிற்சி—1

கீழ் வரும் சொற்களை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது :

முக்கியமானது, தொழில், ஆதாரம், திண்ணம், பெரும்பாலோர், செம்மையாக, பிரதேசம், அமர்த்தி, தொழுது, அர்த்தம்.

## பயிற்சி—2


இந்தியா பயிர்த் தொழில் மிக்க நாடு—இதைப்போல நான்கு வாக்கியங்கள் உங்கள் ஊரைப் பற்றி எழுது.

## பயிற்சி—3

ஆறுகள் ஓடும் பிரதேசங்களில் மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பார்கள்:

மேலுள்ள வாக்கியத்தைப் போலக் கீழ் வருவனவற்றை முடித்துக் காட்டு:—

1. மலைகள் நிறைந்துள்ள பிரதேசங்களில்———
2. காடுகள் நிறைந்துள்ள பிரதேசங்களில்———
3. இயந்திரங்கள் நிறைந்துள்ள பிரதேசங்களில் —
4. கடற்கரை அமைந்துள்ள பிரதேசங்களில் ——
5. கல்வி நிறைந்துள்ள நாடுகளில்———
6. கைத்தொழில்கள் நிறைந்துள்ள நாடுகளில் ——




# 4. மைனாவும் முயலும்

1. ஒரு காட்டில் பெரிய மரம் ஒன்றிருந்தது. அதில் ஒரு பொந்து உண்டு. அப்பொந்தில் ஒரு மைனா வாழ்ந்திருந்தது. மைனா ஒரு நாள் இரை தேட வெளியே போயிற்று. அப்போது முயல் ஓடி வந்து, பொந்தில் புகுந்து மறைந்திருந்தது.

2. மாலையானதும் மைனா திரும்பி வந்தது; முயலைப் பார்த்தது. "ஐயா, முயலே, இது நான் வசிக்கும் இடம்; நீ ஏன் இங்கு வந்தாய்? உடனே அகன்றுவிடு," என்றது. அப்போது

முயல், "நான் போகமாட்டேன். இது எல்லோருக்கும் பொதுவான இடம்," என்றது.

3. இப்படி இரண்டும் சண்டை செய்யத் தொடங்கின. முடிவில் இரண்டும் கூடி ஒரு பூனையினிடம் போயின. அந்தப் பூனை கண்களை மூடிக்கொண்டிருந்தது. அதனால், பூனை தவம் செய்வதாக முயலும் மைனாவும் நினைத்துவிட்டன; ஆனாலும், பக்கத்தில் போகப் பயப்பட்டன; தூரத்தில் இருந்தே வழக்கைக் கூறின.

4. வழக்கைக் கேட்ட பூனை, "நீங்கள் சொல்லுவது எனக்குக் கேட்கவில்லை, நான் வயதுசென்ற கிழவன். ஆகையால், பக்கத்தில் வந்து பகருங்கள்," என்றது. அவைகளும் கொஞ்சம் நெருங்கி வந்து சொல்லின. அப்போதும் பூனை, "அடடா! பாதி கேட்டது; பாதி கேட்கவில்லையே! நான் எப்படி நியாயம் தீர்ப்பேன்?" என்றது.

5. அதைக் கேட்ட மைனா, "பூனையே, உன் அருகில் வர நாங்கள் அஞ்சுகிறோம்," என்றது. உடனே பூனை, "ஏன் பயப்பட வேண்டும்? நான் தவம் செய்கிறேன். கொல்லும் தொழிலை அடியோடு விட்டுவிட்டேன். கொலை செய்கிறவர்களைக் கண்ணாலும் பார்க்க மாட்டேன்," என்றது.

6. அந்தச் சொல்லை நம்பிய மைனாவும் முயலும் அருகில் போயின. பூனை ஒரே பாய்ச்ச-

லாய்ப் பாய்ந்து இரண்டையும் பிடித்துக் கடித்துத் தின்றது.

7. ஆகையால், தீயவர்கள் சொல்லில் நம்பிக்கை வைக்கலாகாது.

| | | |
|---|---|---|
| மைனு | தூரத்தில் | கொல்லும் |
| பொந்து | வழக்கை | தொழிலை |
| வாழ்ந்திருந்தது | பகருங்கள் | அடியோடு |
| புகுந்து | நெருங்கி | நம்பிக்கை |
| அகன்றுவிடு | அடடா | நிரம்பிய |
| போகமாட்டேன் | நியாயம் | பாய்ச்சல் |
| பொதுவான | தீர்ப்பேன் | தாவியது |
| பயப்பட்டன | அஞ்சுகிறோம் | போயின |

**பயிற்சி :**

**விளக்கம் :—** ஒன்று + இருந்தது = ஒன்றிருந்தது, செய்வது + ஆக = செய்வதாக, மைனு + உம் = மைனுவும், பயம் + பட்டன = பயப்பட்டன, கேட்க + இல்லை = கேட்கவில்லை, அடி + ஒடு = அடியோடு.

**பிரித்து எழுது :**

வாழ்ந்திருந்த, மாலையானதும், மூடியிருந்தது.

**சேர்த்து எழுது :**

வசிக்கும் இடம், பூனை இடம், தூரத்தில் இருந்தது.

**வேறு மொழி கூறு :**

காட்டில், பகருங்கள், அருகில், போயின, கூறின.

# 5. ஞானசம்பந்தர்

1. சோழ நாட்டில் **சீர்காழி** என்று ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் ஓர் அந்தணர் இருந்தார். அவர் பெயர் **சிவபாத இருதயர்**. அவருடைய மனைவியின் பெயர் **பகவதியார்**. அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குப் பெற்றோர் **ஞானசம்பந்தர்** என்று பெயரிட்டனர்; அன்போடு வளர்த்து வந்தனர். அக்குழந்தை அழகிலும் அறிவிலும் சிறந்து விளங்கியது.

2. சிவபாத இருதயர் தினந்தோறும் கோவிலுக்குச் செல்வார். அவர் சிறுவரையும் அழைத்துச் செல்வார். அக்குழந்தை சிறு வயதிலேயே இனிமையாகப் பாடும்; கடவுளை வணங்கும்; காலையும் மாலையும் கோவிலுக்குப் போகும். ஒரு சமயம் சிவபாத இருதயர் குளத்திற்கு நீராடச் சென்றார்; குழந்தையும் உடன் சென்றது. தந்தையார் நீரில் மூழ்கினார். தந்தையாரைக் காணாது குழந்தை அழுதது. கடவுள் காட்சி அளித்தார். பார்வதியார் ஞானப் பாலூட்டினார். குழந்தையின் அழுகை நின்றது. ஞானம் பெருகியது.

3. ஞானசம்பந்தர் ஒரு சமயம் மதுரைக்குப் போனார்; அங்கே ஒரு மடத்தில் தங்கினார். அந்த ஊருக்கு அரசனாகிய பாண்டியன்

சம்பந்தரிடம் வெறுப்புக் கொண்டிருந்தான். ஆனால், பாண்டியமன்னன் மந்திரியும் அரசி-யும் அவரை வெறுக்கவில்லை; பெரிதும் விரும்-பினர்; சம்பந்தரை அவதார புருஷராக எண்ணி வழிபட்டனர்,

4. அரசனுக்குத் தெரிந்த சிலர், சம்பந்தர் இருந்த இடத்திற்குத் தீ வைத்தார்கள். அரசன் அதைத் தடுக்கவே இல்லை. பின்பு என்ன நடந்தது தெரியுமா? சம்பந்தர் இருந்த இடம் தீப்பிடிக்கவேயில்லை. அதற்குப் பதிலாகப் பாண்டியனுக்குச் சுரநோய் வந்தது.

5. அதற்காக எவ்வளவோ மருந்து கொடுத்தார்கள்; மந்திரஞ் செய்தார்கள். எதனு லும் நோய் நீங்கவில்லை. பின்பு மந்திரியும் மகா-ராணியும் வந்து சம்பந்தரை வேண்டினார்கள். அவரும் உடனே அரண்மனைக்குப் போனார். அவர் போய் என்ன செய்தார் தெரியுமா?

“ மந்திர மாவது நீறு வா்னவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான்
[திரு நீறே.”

என்று பாடினார்; பாண்டியன் உடம்பில் திரு-நீறு பூசினார்.

6. உடனே பாண்டியனுக்கு நோய் ஒழிந்தது. அப்போதுதான் அரசன் குழந்தையின் பெருமையை அறிந்தான். அது முதல் பாண்டியன் சம்பந்தரிடம் கொண்டிருந்த வெறுப்பு நீங்கிற்று; அவரிடம் மிகுந்த பக்தி கொண்டு அவருக்கு வேண்டுவன செய்து வந்தான். சம்பந்தர் புகழ் தமிழ் நாடெங்கும் பரந்தது.

| | | |
|---|---|---|
| அந்தணர் | தடுக்கவே | சுந்தரம் |
| வணங்கும் | தீப்பிடிக்க | தந்திரம் |
| திருவடி | சுரநோய் | துதிக்க |
| போற்றும் | மருந்து | நீறு |
| தங்கினர் | மந்திரம் | பூசினர் |
| வழிபாடு | நீங்கவில்லை | ஒழிந்தது |
| மந்திரி | மகாராணி | பெருமை |
| வெறுப்பு | அரண்மனை | புகழ் |

## பயிற்சி :

**விளக்கம் :**—நாடு + இல் = நாட்டில், அழகு + உம் = அழகும், திரு + அடி = திருவடி, சுரம் + நோய் = சுரநோய், ஞானம் + பால் = ஞானப்பால்.

**பிரித்து எழுது :**

இனிமையாக, அரசனிடம், பதிலாக, சம்பந்தரை.

**சேர்த்து எழுது :**

அவர் உடைய, அழகு அறிவு, அரசன் இடம், நீங்க இல்லை.

**சொற்றொடரை முடி :**

1. சீர்காழி சோழ நாட்டில்——.
2. சம்பந்தர் ஒரு சமயம் மதுரைக்குப்——.
3. பாண்டியனுக்குச் சுரநோய் ——.
4. சம்பந்தர் பாண்டியன் உடம்பில் திருநீறு——.
5. சம்பந்தர் புகழ் எங்கும்——.

**கேள்விகள் :**

1. கடவுள்—இப்பொருளைத் தரும் வேறொரு சொல் யாது ?
2. ஞான சம்பந்தர் எந்த ஊரில் பிறந்தார் ?
3. சம்பந்தருடைய பெற்றோர் யார் ?
4. மதுரையில் சம்பந்தருக்கு ஏற்பட்ட துன்பம் என்ன ?
5. பாண்டியனுடைய நோய் எப்படி நீங்கியது ?

# 6. நாட்டுப் பாட்டு

1. உலகமெலாம் போற்றுபுகழ்
ஒளிபெருகும் நாடு,
உமைகேள்வன் அளித்ததமிழ்
ஓங்கிவளர் நாடு.

2. கன்னிமுதல் இமயம்வரை
கண்டதமிழ் நாடு,
காசினியோர் போற்றுகின்ற
கலைகள்வளர் நாடு.


3. முடிமன்னர் மூவரவர்
மொய்ம்புவளர் நாடு,
முத்தமிழும் ஓங்கிடவே
மொய்புகழ்கொள் நாடு.

4. கம்பன்கும்பன் காளமேகம்
களித்ததமிழ் நாடு,
அம்புவியோர் போற்றுதெய்வ
அருந்தமிழ்நல் நாடு.

5. வள்ளுவனைப் பெற்றபெரு
மகிமைகொளும் நாடு,
தெள்ளுதமிழ்ப் புலவரெலாந்
திகழ்ந்தபெரு நாடு.

6. இத்திருநல் நாடுதனை
என்றும்போற்று வோமே,
ஈசனருள் நிறைந்திடவே
என்றும்வாழ்த்து வோமே.

R. S. சர்மா



# 7. யானை

1. மிருகங்களில் மிகப் பெரியது யானை. நீ யானையைப் பார்த்திருக்கிறாயா? யானை காட்டில் வாழும் மிருகம். காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தினும் பெரியது இதுதான்.

2. யானையின் முகத்தில் நீளமாய் ஒன்று தொங்குகிறது அல்லவா? அதுதான் தும்பிக்கை. யானை அக்கையால் உணவை எடுத்து உண்ணும். அதனால் யானைக்குத் தும்பி என்று பெயர் உண்டு. வாயில் இருபக்கத்திலும் இருப்பவை தந்தங்கள். தந்தத்தின் நிறம் வெண்மை.

3. யானையின் காதுகளைப் பார். அவை மிக அகலமானவை ; முறம் போன்றவை. யானையின் கண்கள் மிகச் சிறியவை. அதன் கால்கள் உரலைப் போலப் பருத்திருக்கின்றன. வால் துடைப்பத்தைப் போல இருக்கும்.

4. யானையின் கால்களில் நகங்கள் உள்ளன. யானை மிகஉயரமாக வளரும். யானை கரிய நிறம். யானைக்குக் கரி என்ற பெயரும் உண்டு. அதன் உடல் சுரசுரப்பாயிருக்கும்.

5. தும்பிக்கை யானைக்குக் கையாக உதவுகிறது. அதனால், யானை மரக்கிளைகளையும் முறித்துவிடும். அதன் தந்தங்கள் மிகவும் உறுதியானவை. யானை தனது தந்தத்தால் கோட்டைக் கதவுகளையும் இடித்து உடைத்துவிடும்.

6. யானை அரிசி, பருப்பு, தேங்காய், தழை முதலியவைகளைத் தின்னும். யானை அரசர்களிடம் இருக்கும். அது வீரத்துடன் சண்டை செய்யும். அரசர்கள் யானையின்மீது ஏறி ஊர் வலம் வருவார்கள்.

7. பெரிய கோயில்களிலும் யானை உண்டு. யானையைப் பாதுகாப்பவனுக்கு **மாவுத்தன்** என்பது பெயர். அவனை **யானைப்பாகன்** என்றும் சொல்லுவர்.

8. யானையினிடம் விளையாட்டாகவும் குறும்பு செய்யக்கூடாது. அப்படிச் செய்தால்,

அது குறும்புக்குப் பதில் குறும்பு செய்துவிடும். யானைக்கு ஞாபக சக்தி மிகவும் அதிகம். தனக்குத் தீங்கு செய்தவனை நெடுங்காலமாயினும் கண்டால் துன்பம் செய்யாது விடாது.

9. யானை பழக்கப்பட்டால் பல வேலைகளைச் செய்யும். யானையின் கழுத்திலும் முதுகிலும் மணிகள் கட்டியிருப்பார்கள். யானை அசைந்து வருங்கால் அம்மணிகள் அடிக்கும். அதனால், யானை வருவதை உணரலாம். அதனால், '**யானைவரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே**' என்ற பழமொழியும் எழுந்தது.

10. யானையின் எலும்புகளும் கொம்பும் தந்தம். அவைகள் விலை உயர்ந்த பொருள்கள் செய்ய உதவும். அதனால், '**யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்.**'

| | | |
|---|---|---|
| அனைத்தினும் | முளைத்துவிடும் | பாதுகாப்பவன் |
| உற்றுப்பார் | உறுதியானவை | மாவுத்தன் |
| தும்பிக்கை | கோட்டை | யானைப்பாகன் |
| தந்தங்கள் | இடித்து | வஞ்சகம் |
| பருத்திருக்கின்றன | வீரத்துடன் | குறும்பு |
| சுரசுரப்பாய் | ஊர் வலம் | |

**பயிற்சி :**

**விளக்கம் :**—அகலம் + ஆனவை = அகலமானவை, பருத்து + இருக்கின்றன = பருத்திருக்கின்றன,

மரம் + கிளை = மரக்கிளை, அதன் + இடம் = அதனிடம்.

**பிரித்து எழுது :**

உயரமாக, நிறமாயிருக்கும், அரசர்களிடம்.

**கூட்டி எழுது :**

காட்டில் உள்ள, சொல்வது உண்டு, வஞ்சகம் உள்ளது, மணி ஓசை.

**சொற்றொடர்களை முடி :**

1. யானை காட்டில் வாழும் ——.
2. யானைக்கு ஒரு துதிக்கை——.
3. யானையின் தந்தங்கள் வெண்மை——.
4. யானையின் கால்கள் உரலைப்போல——.

**கேள்விகள்:**

1. யானையின் கண்கள் எப்படிப்பட்டவை ?
2. யானைக்குக் காதுகள் எப்படியிருக்கின்றன ?
3. தும்பிக்கையின் வேறு பெயர் என்ன ?
4. யானையினிடம் ஏன் குறும்பு செய்யக்கூடாது ?
5. யானை எவற்றைத் தின்னும் ?



# 8. அதிகமான்

1. யாசிக்கிறவர்களுக்கு அளவின்றிப் பொருள் தருகிறவன் வள்ளல். முன் காலத்தில் பல வள்ளல்கள் இருந்தார்கள். அவர்களுள் **அதிகமான் நெடுமான் அஞ்சி** என்பவன் ஒருவன். அதிகமான் மழவர் குலத்தில் பிறந்தவன். மழவர் என்னும் இனத்தவர் பெரிய வீரர்கள்; புயவலி மிக்கவர்கள்.

2. அதிகமான் தகடூருக்கு அரசன். பெரிய உபகாரி; மிகுந்த புகழுடையவன்; கல்வியும் அறிவும் உள்ளவன்; கற்றவரைக் காக்கும் குணம் உடையவன்; நீதி தவறாமல் அரசு செய்கிறவன்.

3. அதிகமான் காலத்தில் ஔவையார் என்ற புலவர் இருந்தார். அவர் பெண்பாலார்

ஆகையால், அவரை ஔவைப் பிராட்டி என்றும் சொல்லுவது உண்டு. ஔவையார் மிகப் படித்தவர்; அதற்கேற்ற அறிவும் உடையவர்; இனிமையான பாட்டுக்கள் பாடுவார். ஆதலால், ஔவையாரை அரசர்களும் மதித்தார்கள்.

4. புலவர்களுக்கு வறுமை உடன் பிறப்பு. ஆகையால், ஔவையார் மன்னர்களை அண்டிப் பிழைத்தார். ஔவையாருக்கு அதிகமானைப் பற்றிய வரலாறு தெரிந்தது. அவன் மீது ஒரு செய்யுள் பாடினார்; அதை எடுத்துக்கொண்டு அவனிடம் போனார். அக்கவியைக் கண்டு அதிகமான் அகம் மகிழ்ந்தான்.

5. ஔவையாரை அதிகமான் தன்னிடமே நிறுத்திக்கொண்டான்; பாட்டி கூறும் புத்தியைக் கேட்டு நடந்துகொண்டான். அதனால், அவனுக்கு மேலும் மேலும் புகழ் வளர்ந்தது.

6. ஒரு நாள் அதிகமான் வேட்டைக்குப் போனான். அங்கே ஒரு நெல்லிக்கனி கிடைத்தது. அதை உண்பவர்களுக்கு ஆயுள் வளரும். ஆகையால், அதிகமான் அப்பழத்தைப் பாட்டிக்குக் கொடுக்க விரும்பினான். உடனே திரும்பி வந்தான். பழத்தை ஔவையாரிடம் கொடுத்து உண்ணும்படி வேண்டினான். ஔவையார் அதை உண்டார்.

7. அதிகமான் அதைக் கண்டு களித்-தான். "அம்மா, நீங்கள் அதிக நாள் வாழ்வீர்கள். அதற்காகத்தான் இப்பழத்தைக்கொண்டுவந்து கொடுத்தேன்," என்றான். அதைக் கேட்டு ஔவையார் அதிகமானைப் புகழ்ந்து பாடினார்.

8. அதிகமானுடைய ஈகைக் குணத்-தைப் பார்த்தீர்களா! நம்மிடத்திலும் ஈகைக் குணம் இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவின்றி | நீதி | அண்டிப்பிழைத்தார் |
| வள்ளல் | யாசிக்கிறவர் | வரலாறு |
| மழவர் குலம் | புலவர் | செய்யுள் |
| இனத்தவர் | பிராட்டி | அகமகிழ்ந்தான் |
| புயவலி | மதித்தார்கள் | மேலும் மேலும் |
| உபகாரி | வறுமை | கருநெல்லி |
| ஈகை | உடன்பிறப்பு | ஆயுள் |

## பயிற்சி :

**விளக்கம்** :—அளவு + இன்றி = அளவின்றி, புகழ் + உடையவன் = புகழுடையவன், அதற்கு + ஏற்ற = அதற்கேற்ற, இனிமை + ஆன = இனிமையான.

**பிரித்து எழுது:**

தன்னிடம், அப்பழம்.

**தகுந்த சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுது:**

1. அதிகமான் அளவின்றிக் கொடுக்கும்——.

2. அதிகமான் தகடூரை ஆண்ட——.

3. ஔவையார் இனிமையான செய்யுள்——.
4. ஔவையார் அதிகமான் இடத்திலேயே——.
5. அதிகமான் ஔவையாருக்குக் கருநெல்லிக் கனி——.

### கேள்விகள் :

1. எவர்களுக்கு வள்ளல் என்று பெயர் ?
2. ஔவையார் காலத்தில் தகடூரின் அரசன் யார் ?
3. அரசன் எதனுல் ஔவையாரை மதித்தான் ?
4. அதிகமானுக்கு எதனுல் புகழ் வளர்ந்தது ?
5. கருநெல்லிப் பழத்திஞல் என்ன நன்மை ?

## 9. பாப்பாப் பாட்டு

1. ஓடி விளையாடு பாப்பா ! — நீ
   ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா ! — ஒரு
   குழந்தையை வையாதே பாப்பா !

2. காலை யெழுந்தவுடன் படிப்பு — பின்பு
   கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும்விளை யாட்டு — என்று
   வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா !


3. தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
   தாயென்று கும்பிடடி பாப்பா !
அமிழ்தில் இனியதடி பாப்பா ! — நம்
   ஆன்றோர்கள் தேசமடி பாப்பா !

4. சாதிகள் இல்லையடி பாப்பா ! — குலத்
   தாழ்ச்சி உயர்ச்சிசொலல் பாவம்;
நீதி உயர்ந்தமதி கல்வி — அன்பு
   நிறைய உடையவர்கள் மேலோர்.

5. உயிர்களி டத்தில்அன்பு வேணும் — தெய்வம்
   உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும் ; — இது
   வாழும் முறைமையடி பாப்பா !

— சி. சுப்பிரமணிய பாரதியார்

# 10. காக்கையும் குடமும்




படத்தைப் பார்த்துக் கதையைக் கூறு.

## கதையை எழுது

குறிப்பு: படி:

1. வெயில் காலம்—காகம் ஒன்று தாகத்தால் தவித்துக்கொண்டிருந்தது—பல இடங்களுக்கும் பறந்து சென்றது—ஓரிடத்தில் ஒரு குடத்தைப் பார்த்தது.
2. குடத்தின் அடிப்பாகத்தில் நீர் இருந்தது—காகம் கழுத்தை உள்ளே நுழைத்தது—நீர் எட்டவில்லை.
3. பக்கத்தில் சிறு கற்கள் இருந்தன—அவற்றைக் காகம் கண்டது—ஒவ்வொன்ருகக் கொத்திக் குடத்தில் போட்டது.
4. கற்கள் குடத்துள் போடப்போட நீர் மேலே மேலே எழுந்தது—முக்கால் குடம் அளவும் நீர் வந்தது.
5. காகம் விடாது பின்னும் கற்களைப் போட்டது—நீர் குடத்தின் கழுத்தளவு வந்தது—நீர் காகத்திற்கு எட்டிற்று.
6. காகம் நீரைக் குடித்தது—அதன் தாகம் தணிந்தது——அது பறந்து சென்றது.

**நீதி:—1. எக்காரியத்திற்கும் புத்தி வேண்டும்.**

**2. எதையும் அவசரப்படாது யோசித்துச் செய்ய வேண்டும்.**

**3. அறிவால் ஆராய்ந்தால் ஆகாதது ஒன்றில்லை.**

# 11. பெயர்ச்சொல்

| | | |
|---|---|---|
| மரம் | மாதம் | பசுமை |
| வீடு | கால் | நடத்தல் |

1. பிள்ளைகளே, மேலே உள்ள சொற்கள் **பொருள், இடம், காலம், உறுப்பு, குணம், தொழில்** என்பவற்றைக் காட்டுகின்றன. அவைகள் பெயர்களைக் குறிப்பதனால், **பெயர்ச்சொற்கள்** எனப்படும்.

**ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல்.**

கந்தன் நேற்றுக் கடையில் மூன்று புத்தகம் வாங்கினான்.

இந்த வாக்கியத்தில்,

கந்தன்-ஒருவன் பெயரைக் குறிக்கிறது.

நேற்று-காலத்தின் பெயரைக் குறிக்கிறது.

கடை-இடத்தின் பெயரைக் குறிக்கிறது.

புத்தகம்-பொருளின் பெயரைக் குறிக்கிறது.

மூன்று-எண்ணின் பெயரைக் குறிக்கிறது.

**பயிற்சி—1**

கீழ் வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுது :—

பத்துக் குதிரைகள் நேற்றுப் பந்தயத்தில் ஓடின.

2. எட்டுப் பிள்ளைகள் வெண்மை உடை அணிந்திருந்தனர்.

3. அந்தத் தோப்பில் முப்பது மரங்களும் இரண்டு கிணறுகளும் இருக்கின்றன.

4. எங்கள் வீட்டில் மூன்று பீரோக்களும், ஐந்து மேஜைகளும், எட்டு நாற்காலிகளும் இருக்கின்றன.

5. சிதம்பரத்திற்குச் சென்ற என் அண்ணன் நேற்றுத் தஞ்சாவூருக்குப் போவதாகக் கடிதம் எழுதினன்.

6. மரங்களின் இலைகளும் மலர்களும் அழகாக இருக்கின்றன.

## பயிற்சி—2

கீழ்வரும் பகுதியைப் படி (5 நிமிஷங்கள்)—சொல்; எழுது :—

ஒரு நாய் கடைத்தெரு வழியே ஓடிற்று. அங்குக் கிழவி ஒரு தட்டில் வடை வைத்து விற்றுக்கொண்டிருந்தாள். அவள் அறியாதபடி நாய் ஒரு வடையை வாயில் கௌவிக்கொண்டு வந்தது. நாய் வேகமாக ஓடி வந்தது. வழியில் ஓர் ஓடை இருந்தது. ஓடை மீது பலகை போடப்பட்டிருந்தது. அதன்மீது நாய் நடந்து சென்றது. நடுவில் நாய் நின்று தண்ணீரில் எட்டிப் பார்த்தது. நாயின் நிழல் தண்ணீரில் தோன்றிற்று. தண்ணீரில் தெரிந்த நாயின் வாயிலும் வடை இருந்தது.

நாய் அந்த வடையையும் அடைய எண்ணியது. அதனல், அது வாயைத் திறந்து குரைத்தது. நாயின் வாயிலிருந்து வடை கீழே விழுந்தது. தண்ணீரில் இருந்த

நாயின் வாயிலும் வடையைக் காணவில்லை. 'ஐயோ! வீணாக வடையை இழந்தேனே!' என்று அந்த நாய் வருந்தியது. நாய் தண்ணீரில் தோன்றிய வடிவம் தன்னுருவமே என்பதை அறியவில்லை. அது மிகவும் வருத்தத்தோடு சென்றது.

### பயிற்சி—3

இதிலுள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுது.


### பயிற்சி—4

உன் வகுப்பு அறையில் காணும் பொருள்களின் பெயர்களை எழுது.

### பயிற்சி—5

மெலிந்த புழு × கொழுத்த புழு—இதுபோல எதிர்ப் பதங்களை எழுது :—

| | |
|---|---|
| குட்டை நாக்கு × | மூடிக்கொள் × |
| நெட்டை மனிதன் × | மெதுவாக்கி × |
| சிறிய பையன் × | நல்ல பையன் × |



## 12. ஊரைக் காத்த உத்தமன்

1. முன் காலத்தில் **பாண்டு** என்ற ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஐந்து பிள்ளைகள் உண்டு. அவர்கள் பெயர் **தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்** என்பன. அவர்களைப் **பாண்டவர்** என்பது வழக்கம்.

2. பாண்டவர் பன்னிரண்டு வருஷம் காட்டில் வசித்தார்கள். அவர்களுடன் தாயாகிய **குந்தி**யும் போயிருந்தாள். அவர்கள் **வேத்திரகீயம்** என்னும் வனத்தில் சில நாட்கள் தங்கினார்கள். அங்கே **பகன்** என்ற அரக்கன் ஒருவன் இருந்தான்.

3. வேத்திரகீயத்தில் சில அந்தணர்கள் வசித்திருந்தார்கள். அவர்கள் பகன் என்பவனுக்கு அடங்கியிருந்தார்கள். தினம் ஒரு மனிதன் பகனுக்கு உணவாக வேண்டும். ஒவ்-

வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் முறையாகச் செல்ல வேண்டும். ஓர் ஆள் இரை ஆவதோடு ஒரு வண்டி உணவும் கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாடு அமைந்திருந்தது. அதை வீமன் அறிந்தான். ஒரு நாள் வீமன் தானே உணவு வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான்.

4. வீமன் மிகுந்த பலமுடையவன்; சண்டை செய்வதில் கெட்டிக்காரன். அவன், போகும் வழியிலேயே வண்டியில் இருந்த சோறு முதலியவற்றைத் தின்றுவிட்டான்; அதோடு மெதுவாகவும் போனான். பகனுக்குப் பசியின் கொடுமை மிகுந்தது.

5. வெற்று வண்டியுடன் வரும் வீமனைப் பகன் பார்த்தான்; கோபம் கொண்டு எழுந்-தான்: ஒரே தாவு தாவினான்; வீமனைப் பிடித்து ஒரு குத்துக் குத்தினான். வீமனும் எதிர்த்துக் குத்தினான். இருவரும் நெடுநேரம் சண்டை செய்தார்கள். முடிவில் பகன் இறந்துவிட்-டான்.

6. வீமன் வெற்றியோடு திரும்பி வந்தான். வேத்திரகீய அந்தணர்களுக்கு அதிகக் களிப்பு உண்டாயிற்று. அவர்கள் வீமனைப் புகழ்ந்-தார்கள். வீமனால் எல்லோரும் பயம் நீங்கி வாழ்ந்து வந்தார்கள்.

ஊருக்கு உதவுகிறவனே உத்தமன்.

| | | |
|---|---|---|
| பாண்டவர் | முறையாக | வெற்று வண்டி |
| வேத்திரகியம் | இரையாவது | எழுந்து |
| வனம் | மெதுவாகவும் | தாவு |
| அரக்கன் | கொடுமை | குத்து |

## பயிற்சி :

**விளக்கம் :**—தாய்+ஆகிய=தாயாகிய. வசித்து+இருந்தார்கள்=வசித்திருந்தார்கள். உணவு + ஆக = உணவாக. ஏற்பாடு+உம்=ஏற்பாடும், பலம்+உடையவன்=பலமுடையவன்.

**பிரித்து எழுது :—**

சென்றிருந்தான். அடங்கியிருந்தார்சள், வண்டி-யுடன்.

**சேர்த்து எழுது :—**


வண்டியில் இருந்த, அரக்கன் ஒருவன், ஒருவன் இருந்தான்.

**தொடர்களை முடி :—**

1. பாண்டு என்பவன் ஓர்——
2. பாண்டுவுக்கு ஐந்து பிள்ளைகள் ——
3. பகன் என்பவன் கொடிய ——
4. வீமன் மிகுந்த பலம்——

## கேள்விகள் :

1. பாண்டுவின் மக்கள் பெயர் என்ன ?
2. குந்தி என்பவள் யார் ?
3. பகனுக்கு அடங்கியிருந்தவர்கள் யார் ?
4. பகனைக் கொன்றவன் எவன் ?



படத்தைப் பார் ; கதையைச் சொல்.

## 13. உண்மை நண்பன் யார்?

நண்பர் இருவர் நடுக்காட்டில்
நடந்து சென்றனர் ஓர்தினத்தில்
'உண்மை நண்பன் யார்என்னில்
உற்ற விடத்து உதவுபவன்.' 1

என்றே கூறிச் செல்லுகையில்
எதிரில் கரடி வரக்கண்டு
நின்ற மரத்தின் மீதேறி
நின்றான் ஒருவன் அக்கணமே. 2

மற்றவன் செய்வது யாதெனவே
மனத்தில் எண்ணி மண்ணின்மேல்
முற்ற மடிந்த பிணம்போல
மூச்சை அடக்கிக் கிடந்தானே. 3

கரடியும் வந்து காதினையும்
கைகால் மூக்குத் தலையினையும்
புரட்டிப் பார்த்துப் பிணமென்றே
போயது பின்னர் மரத்தவன்தான் 4

இறங்கி வந்து நண்பனைக்கூய்,
'இன்று கரடி சொல்லியதென்?
அறவே சொல்வாய்,' எனக்கேட்க,
அந்த நண்பன் சொல்வானே: 5

'உற்ற இடத்தில் உதவுபவன்
உண்மை நண்பன்' எனக்கரடி
முற்றும் மொழிந்து எனக்கிந்த
முதுமொழி கூறிப் போயதுவே. 6

R. S. சர்மா

**பயிற்சி :**

இந்தக் கதையை எழுது.

கீழே கோடிட்ட இடங்களில் வார்த்தைகளை நிரப்பு:—

இருவர் காட்டு வழியே...........எதிரில் ஒரு......... வந்தது. ஒருவன் மரத்தின்மேல்.............மற்ருெரு வன்...........படுத்துக்கொண்டான். கரடி.........அவனை மோந்து...............அவனைப் பிணம் என்று கருதிப் போயிற்று......மரத்திலிருந்தவன்...............கரடி என்ன .........என்று படுத்திருந்தவனைக்.........கரடி ஆபத்தில் ..........சினேகிதன்......என்று சொல்லியது என்ருன்.

## 14. ஔவையார்

1. பிள்ளைகளே, ஔவையாரைப் பற்றி நீங்கள் முன்பு சிறிது தெரிந்துகொண்டீர்கள் அல்லவா ? ஔவையாரைப்பற்றிக் கூறப்படும் அனேக கதைகள் உண்டு. அவற்றுள் ஒன்றை இங்குப் படிப்போம் ;

2. ஒரு சமயம் ஔவையார் ஊர்ப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவர் எங்குச் சென்ருலும் நடந்து செல்வதே வழக்கம். அவர் வழக்கம்போல நடந்து சென்றுகொண்டிருந்தார். ஔவையார் கிழவி அல்லவா ? அவரால் நெடுந்தூரம் நடக்க முடியுமா ?

அவர் இடை வழியில் களைப்பாற்றிக்கொள்ள விரும்பினர். அவர் அங்குக் காணப்பட்ட ஒரு தோட்டத்திற்குள் சென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார். அத்தோட்டத்தில் நாவல் மரங்கள் சில இருந்தன.

3. சிறுவர் சிலர் அத்தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களில் சிறுவன் ஒருவன் நாவல் மரத்தின்மீது ஏறி நாவல் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருந்தான். அந்தப் பையனை ஔவையார் பார்த்தார். நாவற்பழங்களில் சில தின்றால் தாகம் நீங்குமே என்று அவர் எண்ணினர். ஆதலால், ஔவையார் அம்மரத்தடிக்குச் சென்றார்.

4. ஔவையார் சிறுவனைப் பார்த்து, "எனக்கும் சில பழங்களைப் பறித்துப் போடு," என்று கேட்டார். அதற்கு அப்பையன், "பாட்டி,உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையாருக்கு ஒன்றும் புரியவில்லை. அதனால் ஔவையார். "சுடாத பழமே போடு," என்றார். சிறுவன் ஒரு மரக்கிளையிலிருந்த சில காய்களைப் பறித்துப்போட்டான். பின் அவன் மரக்கிளையை உலுக்கினன். சில பழங்களும் உதிர்ந்து விழுந்தன. அவற்றுள் ஔவையார் பழங்களானவற்றைப் பொறுக்கினர்; ஊதித் தின்னலானர்.

5. ஔவையார் மண்ணை ஊதிப் பழத்-தைத் தின்பதைச் சிறுவன் பார்த்தான். அவன், "பாட்டி, பழம் மிகவும் சுடப்போகிறது! நன்ருக ஊதித் தின்," என்று கூறி நகைத்-தான். அப்பொழுதுதான் ஔவையாருக்குப் பொருள் விளங்கிற்று. சுட்ட பழம் என்பது பழுத்த பழம்; சுடாத பழம் என்பது செங்காய் என்று ஔவையார் அறிந்துகொண்டார். ஔவையாருக்கு இந்தச் சம்பவம் ஒரு நீதி-யைப் புகட்டிற்று. "எவ்வளவு கற்றிருந்தா-லும் இன்னும் கல்லாதவை பல உண்டு," என்பதை ஔவையார் இதனுல் தெரிந்து-கொண்டார்.

6. இதனுல், ஔவையார், "கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு," என்று தொடங்கும் பாட்டைப் பாடினர்.

7. சிறுவர்களே, நாம் எவ்வளவு கற்றிருந்-தாலும், முழுவதும் கற்றவர்களாக இருக்க முடியுமா? ஆதலால், நாம் மிகவும் கற்று-விட்டோம் என்று கர்வங் கொள்ளக்கூடாது.

| | | | |
|---|---|---|---|
| விரும்புதல் | கைம்மண் | விளங்குதல் | புகட்டுதல் |
| சமயம் | பிரயாணம் | கற்றிருத்தல் | நெடுந்தூரம் |
| கர்வம் | புரியவில்லை | உதிர்தல் | ஊதுதல் |
| களைப்பு | பறித்தல் | நகைத்தல் | செங்காய் |
| இடைவழி | தொடங்குதல் | உலுக்குதல் | தாகம் |

## பயிற்சி—1

ஊர்ப்பிரயாணம், வழக்கம், நெடுந்தூரம், கர்வம்-இவைகளை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

## பயிற்சி—2

இந்தப் பாடத்தில் எத்தனை பாராக்கள் இருக்கின்றன ?

முதல் பாராவின் கருத்து :—

ஔவையாரை எல்லோரும் அறிவர். அவரைப் பற்றிய பல கதைகள் உண்டு. அவற்றை அறிய யாவரும் விரும்புவர்.

இது போல இந்தப் பாடத்திலுள்ள ஒவ்வொரு பாராவின் கருத்தையும் எழுது.

## பயிற்சி—3

செங்காய்—இதற்கு எதிரிடையான சொல்லைப் பாடத்திலிருந்து எடுத்து எழுது.

## கேள்விகள் :

1. ஔவையாரின் வழக்கம் என்ன ?
2. அவர் மரத்தடியில் தங்கக் காரணம் என்ன ?
3. சிறுவன் நகைக்கக் காரணம் என்ன ?
4. இக்கதையைச் சுருக்கி எழுது.

# 15. எண்

சிறுவர்களே, நமக்கு யாராவது பணம் கொடுத்தால் நாம் என்ன செய்கிறோம்? நீங்கள் கூட்டல் கணக்குப் போடும் போது என்ன செய்கிறீர்கள்? பழக் கடையில் ஒரு ரூபாய்க்குப் பழம் வாங்கினால், கடைக்காரன் பழங்களை எப்படிக் கொடுக்கிறான்? இதற்கு விடை எப்படிச் சொல்வீர்கள்? 'எண்ணிப் பார்த்து' என்று சொல்வீர்கள் அல்லவா? 'எண்ணிப் பார்ப்பதற்குக் கருவியாய் இருப்பவை எவை? எண்கள் அல்லவா?

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு முதலாகப் பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம் என்பவை எல்லாம் எண்கள். பொருள்களை எண்ணிக் காட்டுவதால், அவை **எண்** எனப் பெயர் பெற்றன.

கீழ் வரும் வார்த்தைகளைக் கவனித்துப் படியுங்கள்:

வீடு—வீடுகள்
புத்தகம்-புத்தகங்கள்
செடி—செடிகள்
மேஜை—மேஜைகள்
மரம்—மரங்கள்
இலை—இலைகள்
குழந்தை--குழந்தைகள்
பிள்ளை—பிள்ளைகள்
எறும்பு—எறும்புகள்
காகிதம் — காகிதங்கள்

வீடு என்பது ஒரு வீட்டையும், வீடுகள் என்பது ஒன்றிற்கு மேற்பட்ட வீடுகளையும் காட்டுகின்றன.

**எண் என்பது இரு வகைப்படும். அவை ஒருமை பன்மை என்பனவாம்.**

**ஒரு பொருளைக் காட்டுவது ஒருமை எனப்படும்.**

**இரண்டு முதலான பல பொருள்களைக் காட்டுவது பன்மை எனப்படும்.**

### பயிற்சி—1

மலர்—மலர்கள்,

இது போலக் கீழ் வரும் சொற்களுக்கும் பன்மை எழுது :—

| | | | |
|---|---|---|---|
| வண்டி | தேங்காய் | கிண்ணம் | படம் |
| கணக்கு | பழம் | பம்பரம் | ஜனம் |
| குடம் | வடை | காற்றாடி | வடம் |
| மிருகம் | குரங்கு | பலப்பம் | குடம் |

### பயிற்சி—2

விளக்குகள்—விளக்கு, இது போலக் கீழ் வரும் சொற்களுக்கு ஒருமை எழுது :—

| | | | |
|---|---|---|---|
| நாய்கள் | கடைகள் | பூனைகள் | பல்லிகள் |
| நாற்காலிகள் | துணிகள் | சட்டிகள் | தேள்கள் |
| புத்தகங்கள் | சட்டைகள் | பேனாக்கள் | பாம்புகள் |
| அலமாரிகள் | குல்லாக்கள் | எலிகள் | ஈக்கள் |

## பயிற்சி - 3


கீழ் வருவதைப்படி ; [6 நிமிஷங்கள்] சொல், எழுது :
ஓர் இடத்தில் தச்சர் சிலர் வேலை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் தூண்கள் செய்ய மரங்கள் அறுத்தனர். அவர்கள் வேலை ஒழிந்ததும் வீடுகளுக்குச் சென்றனர். போகும் பொழுது மரப் பிளவுகளில் ஆப்பை அடித்துவிட்டுச் சென்றனர்.

சில குரங்குகள் அங்கு வந்தன. ஆப்புக்கள் எதற்காக வைக்கப்பட்டுள்ளன ? ஆப்புக்களைப் பிடுங்கிப் பார்க்க ஒரு குரங்கு ஆசைப்பட்டது. அது ஒரு மரப்பிளப்பின்மேல் உட்கார்ந்தது. ஒரு கால் வெளியிலும் ஒரு கால் பிளப்புக்குள்ளுமாக அது உட்கார்ந்துகொண்டது. அது சும்மா இருக்கவில்லை. ஆப்பை அது தன் பலம் கொண்டு ஆட்டிற்று. ஆப்பு வெளியே வந்துவிட்டது. ஆனால், மரப்பகுதிகள் ஒன்று சேர்ந்து காலை நசுக்கின. அதனால், அந்தக் குரங்கு அங்கேயே இறந்தது. அது பட்ட துன்பத்தைக் கண்டு மற்றக் குரங்குகள் ஓடிப்போய்விட்டன.

## பயிற்சி—4

இதில் வந்துள்ள பெயர்ச்சொற்களை எழுது.

அவைகளை ஒருமை, பன்மை என்ற முறைப்படி பிரித்துக் காட்டு.




# 16. மயில்

1. மயில் ஓர் அழகான பறவை. அது காட்டில் வசிக்கும். மயிலின் இறகுகள் பல வகை நிறங்கள் உடையன. அவை என்ன என்ன நிறங்கள் தெரியுமா? நீலம், மஞ்சள், பச்சை முதலிய நிறங்கள் கலந்து இருக்கின்றன. சிறிது சிவப்பு நிறமும் உண்டு.

2. மயிலுக்குத் தலை சிறியது; ஆயினும், நீண்ட கழுத்து உண்டு. கால்களும் நீண்டிருக்கின்றன. மயிலின் உடல் பெரியது; இறக்கைகள் சிறியவை. அதனாலேதான் மயிலால் பறக்க முடியவில்லை.

133257

3. படத்தில் காணப்படும் மயில்களில் இரண்டு ஆண்கள். ஆண் மயிலுக்குத்தான் தலையின் உச்சியில் கொண்டை உண்டு. வால் இறகும் நீண்டிருக்கும். மயிலின்வால் இறகுக்குத் **தோகை** என்பது பெயர். ஒரு மயில் தன் தோகையை விரித்துக்கொண்டு ஆடுகிறது பார்.

4. தோகையின் முனையில் அழகான வட்டம் ஒன்று உண்டு, அதைக் கண்ணுடி என்று பகர்வதுண்டு. அந்தக் கண்ணுடிகளைச் சேர்த்து விசிறிகள் செய்யலாம். பெண் மயிலுக்கு நீண்ட தோகை இல்லை. மயில் இறகு மருந்துக்கு உதவும்.

5. மயில் மேகத்தைக் கண்டால் மகிழ்ந்து தோகை விரித்து ஆடும். மயில் தோகை விரித்தாடுவது பார்ப்பதற்கு மிக அழகிய காட்சியாகும். ஆனுல், இவ்வளவு அழகான மயில் கத்தினுல் யாருக்கும் பிடிக்காது. அது கத்துவதை அகவுகிறது என்பது வழக்கம்.

6. மயில் உள்ள இடத்தில் பாம்பு வாராது. ஏன் தெரியுமா? மயில் பாம்பைக் கொத்திக் கொல்லும். மயிலைக் கோவிலில் வளர்ப்பார்கள். பணக்காரர்கள் வீட்டுத் தோட்டத்திலும் வளர்ப்பது உண்டு. மயில் முருகக்கடவுளுக்கு வாகனம்.

| | | |
|---|---|---|
| இறகுகள் | கொண்டை | விசிறிகள் |
| நீலம் | தோகை | மேகத்தை |
| மஞ்சள் | விரித்து | மகிழ்வு |
| பச்சை | முனையில் | திரண்டு |
| பகர்வது | வட்டம் | அகவுகிறது |
| உச்சியில் | கண்ணாடி | தோட்டம் |

## பயிற்சி :

**விளக்கம்** :—என்ன + என்ன = என்னென்ன. தோகை + ஐ = தோகையை. கோயில் + இல் = கோயிலில்.

**பிரித்து எழுது** :—

அழகானது, ஆடுவதில்லை, நன்றாயிருக்கும், பாம்பை.

**சேர்த்து எழுது** :—

பறவை இனம், கலந்து இருக்கின்றன, தலை உச்சி, வால் இறகு, பகர்வது உண்டு.

**எதிர் மொழி எழுது** :—


| | |
|---|---|
| சிறியது × பெரியது. | உண்டு × |
| நல்லது × | வந்தது × |

கீழே பெரிய எழுத்தில் உள்ள சொல்லுக்குப் பதில் சொல் எழுது :—

1. மயிலின் உடல் பெரிது.
2. தோகையின் **முனையில்** ஒரு வட்டம் உண்டு.
3. அதைக் கண்ணாடி எனப் **பகர்வது** உண்டு.
4. மேகம் **திரண்டு** இருக்கும்.

## கேள்விகள் :

1. மயிலுக்கு எதனால் அழகு அதிகம் ?
2. ஆண் மயிலுக்கும் பெண் மயிலுக்கும் என்ன வேற்றுமை ?
3. தோகை என்பது எதற்குப் பெயர் ?
4. எதற்குக் கண்ணாடி என்பது பெயர் ?
5. மயில், தோகை, ஆடும், இருக்கும், உடல், வட்டம், கலந்து, பகரும்—பெயர்ச்சொற்கள் எவை ? வினைச்சொற்கள் எவை ?



# 17. ராஜா தேசிங்கு

1. தென்னாற்காட்டு ஜில்லாவில் செஞ்சி என்று ஒரு தாலூக்கா உண்டு. அதை நெடு-நாட்களுக்கு முன் **தரணிசிங்கு** என்னும் மன்னர் ஆண்டார். அவர் டில்லி மன்னருக்கு அடங்கிய சிற்றரசர். அப்போது டில்லியை **ஷா ஆலம்** என்னும் முகம்மதிய சக்கரவர்த்தி ஆண்டார். அவரிடத்தில் ஒரு குதிரை இருந்தது.. அது மிகவும் முரடானது. அதற்குப் **பாராசாரி** என்பது பெயர். அதை அடக்கிச் சவாரி செய்ய ஒருவ-ராலும் முடியவில்லை. ஆகையால், "குதிரையை அடக்கும் வீரன் ஒருவன் வேண்டும். அப்படிப் பட்ட வீரனுக்கு மிகுந்த பொருள் தருவேன்," என்றும், " அடக்கும் வீரமற்றுத் தோல்வி

அடைந்தவர்களைச் சிறையிலிடுவேன்,” என்-றும் எல்லா மன்னர்களுக்கும் ஷா ஆலம் எழுதித் தெரிவித்திருந்தார்.

2. அக்குதிரையை அடக்கப் பல மன்-னர்கள் சென்று தோற்றார்கள். சிறைத் தண்-டனையை ஏற்றார்கள். அவர்களுள் தரணி-சிங்கும் ஒருவர். தரணிசிங்குக்குப் பின் அவரு-டைய தம்பியாரும் சென்று சிறைப்பட்டார்.

3. தரணிசிங்கு டில்லிக்குப்போன இரண்-டொரு மாதங்கட்குப் பின்பு அவருடைய மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தை அழகும் அறிவும் ஆண்மையும் நிறைந்து வளர்ந்தது. அப்பிள்ளையின் பெயர் **தேசிங்கு.** தேசிங்குக்குப் பதினாறு வயது ஆயிற்று. அவன் ஒரு பெரிய வீரனாய் விளங்-கினான். தன் தந்தையாரும் சிற்றப்பரும் சிறையிலிருப்பதைக் கேட்டறிந்தான்; உடனே புறப்பட்டு டில்லிக்குப் போனான். பாதுஷாவைப் பார்த்தான் “குதிரையை அடக்-கிச் சவாரி செய்ய வந்தேன்,” என்றான். ஷா ஆலம் குதிரையைக் காட்ட, அதைத் தேசிங்கு பார்த்தான். கடிவாளத்தைப் பிடித்து முதுகில் ஒரு தட்டுத் தட்டினான். குதிரை முதுகை வளைத்துக் கொடுத்தது. தேசிங்கு அதன்மீது பாய்ந்து ஏறினான். குதிரை ஓட்டம் எடுத்தது. தாவித் தாவிப் போயிற்று. அதைப் பார்த்-திருந்தவர்கள் பயப்பட்டார்கள்.

4. சிறிது நேரத்துக்கெல்லாம் தேசிங்கு குதிரையுடன் திரும்பி வந்தான். குதிரைக்குப் பெருமூச்சு உண்டாயிற்று. வாயில் நுரை வழிந்தது. உடம்பெல்லாம் வியர்வை கண்டது. பாதுஷாவுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

5. பாதுஷா தேசிங்கைப் பக்கத்தில் கூப்பிட்டார்; கை பிடித்துக் குலுக்கினார். தோளில் தட்டிக்கொடுத்தார். "தேசிங்கு, நீதான் வீரன். இந்தக் குதிரை உனக்குத்தான் தகுந்தது. இதை நீ சொந்தமாக வைத்துக்கொள். இது முதல் உன்னிடம் கப்பம் வாங்க மாட்டேன்," என்றார்.

6. தேசிங்கு பாதுஷாவை வணங்கினான். தரணிசிங்கையும் சிறிய தந்தையையும் சிறையினின்று விடுமாறு கேட்டான். அப்படியே அவர்களும் விடப்பட்டனர். அதுபோல மற்ற மன்னர்களையும் விடச் செய்தான். ஊருக்குப் போக விடை கேட்டான். ஷா ஆலம் தேசிங்கைப் பார்த்து, "வீரனே, உன்னை விட்டுப் பிரிய என் மனம் விரும்பவில்லை. ஆகையால், நீ வருஷத்துக்கு ஒரு முறை என்னிடம் வந்து போக வேண்டும்," என்று கூறினார். தேசிங்கு அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான்.

7. பாதுஷாவின் சேனைத்தலைவன் தேசிங்-கின் வீரத்துக்காக மிகவும் மெச்சினான்; தன் மகளைத் தேசிங்குக்கு மணஞ்செய்து கொடுத்-தான். அவன் தன் தந்தை முதலியவர்களுடன் தன் நாட்டிற்குத் திரும்பி வந்தான்; சில நாட்களில் அரசனானான்.

| | | |
|---|---|---|
| ஜில்லா | ஏற்றார்கள் | வியர்வை |
| பலம் | கடிவாளத்தை | குலுக்கினான் |
| நவாபு | தட்டு | புகுந்தது |
| பாதுஷா | வளைந்து | சாந்தமாக |
| சக்கரவர்த்தி | பெருமூச்சு | கப்பம் |
| முரடு | நுரை | விடை |
| தோற்றார்கள் | வழிந்தது | ஒப்பு |

பயிற்சி :

**விளக்கம் :—** குணம் + உடையது = குணமுடையது. குதிரை + ஐ = குதிரையை, உடம்பு + எல்லாம் = உடம்பெல்லாம். தேசிங்கு + ஐ = தேசிங்கை, சொந்தம் + ஆக = சொந்தமாக.

**பிரித்து எழுது :—**

பயப்பட்டார்கள், எல்லையில்லை, என்னிடம், நாமும்.

**சேர்த்து எழுது :—**

தெற்கு ஆற்காடு, அழகுடையவன், அதை அடக்க, ஓட்டம் எடுத்தது.

**எதிர் மொழி எழுது :—**

பெரியது, வேண்டும், மகிழ்ச்சி, போக, பிரிய.

கீழே பெரிய எழுத்திலுள்ள சொல்லுக்குப் சொல் பதில் எழுது:

1. தேசிங்கு அரசனுய் இருந்தான்.
2. ஷா ஆலம் டில்லிக்கு பாதுஷா.
3. தேசிங்கு குதிரைமீது பாய்ந்து ஏறினுன்.
4. குதிரை தாவித் தாவி ஓடிற்று.
5. தேசிங்கு சிறிது நேரத்தில் திரும்பினுன்.

கேள்விகள் :

1. செஞ்சி எங்கே இருக்கிறது ?
2. தேசிங்கு ஏன் டில்லிக்குப் போனுன் ?
3. குதிரையைப் பார்த்தவுடன் தேசிங்கு என்ன செய்தான் ?
4. பாதுஷா தேசிங்கின் கையை எப்பொழுது குலுக்கினுர் ?
5. இப்பாடத்திலிருந்து நான்கு பெயர்களை எடுத்து எழுது.

# 18. வினைச்சொல்

கந்தன் படிக்கிறான். முருகன் வருகிறான். கண்ணன் பாடுவான். மாடு புல் மேய்கிறது. குதிரை வண்டி இழுக்கும். கழுகு வானத்தில் பறக்கும். தந்தையார் நேற்று வந்தார்.

சிறுவர்களே, மேலே கூறியுள்ள வாக்கியங்களைக் கவனியுங்கள். படிக்கிறான், வருகிறான் என்பவை எல்லாம் தொழிலைக் குறிக்கின்றன அல்லவா?

ஒரு பொருள் செய்யும் தொழிலைக் குறிப்பது வினைச்சொல் ஆகும். வினை என்றால் தொழில் என்பது பொருள்.

பிள்ளைகளே, கீழ் வரும் வாக்கியங்களைக் கவனித்துப் படியுங்கள். அவைகளிலுள்ள வினைச்சொற்களை எடுத்து எழுதுங்கள்.

1. முருகன் பாடம் படிக்கிறான்.
2. ஆசிரியர் பாடம் போதிக்கிறார்.
3. தச்சன் மரத்தை அறுக்கிறான்.
4. தையல்காரன் துணி தைக்கிறான்.
5. நான் பள்ளிக்கூடம் போனேன்.
6. நீ நேற்றுப் பள்ளிக்கூடம் சென்றாய்.
7. எனக்கு என் தாய் கதை சொன்னாள்.

8. நீங்கள் கடையில் பழங்கள் வாங்கி-
னீர்கள்.

9. அவர்கள் கடற்கரையில் உலாவிக்-
கொண்டிருந்தார்கள்.


10. நாங்கள் தேர்த் திருவிழாப் பார்த்-
தோம்.

**பயிற்சி :**

கீழ்வரும் பகுதியிலுள்ள வினைச்சொற்களை எடுத்து எழுது :—

ஒரு மரத்தின்மேல் இரண்டு காகங்கள் வசித்து வந்தன. அவைகள் முட்டை இடும். மரத்தடியில் வசித்து வந்த பாம்பு ஒன்று அம்முட்டைகளைத் தின்று-விடும். இவ்வாறு பல முறை நடந்தது. ஒரு நாள் காகங்கள் விசனமாய் இருந்தன. அப்போது அங்கு ஒரு நரி வந்தது. அது காகங்களைப் பார்த்து, 'ஏன் விசனப்படுகிறீர்கள் ?'' என்று கேட்டது. அப்போது காகம் தன் குறையைச் சொல்லிற்று, நரி ஒரு தந்திரம் சொல்லியது. அரசன் அரண்மனைக்குச் சென்று அரசி அணியும் மாலையைக் கொண்டு வந்து புற்றில் போடும்படி நரி சொல்லியது. காகம் அப்படியே செய்தது. அதனைச் சேவகர்கள் பார்த்தார்கள். அவர்கள் ஓடி வந்து புற்றை அழித்தார்கள். நாகம் சீறிக்கொண்டு வெளியே வந்தது. சேவகர்கள் அதைக் கொன்றார்கள். காகங்கள் சுகமாய் வாழ்ந்தன.

**உபாயத்தால் ஆகாதது ஒன்றுமில்லை.**




# 19. கரும்பும் சர்க்கரையும்

1. அறுவகைச் சுவைகளுள் இனிப்பு ஒன்று. இதனைத் தித்திப்பு என்பார்கள். இனிப்பைத் தரும் பொருள் சர்க்கரை என்பதை யாவரும் அறிவர். சர்க்கரையைப் பல வகைப் பண்டங்களில் கலந்தும், பானங்களில் கலந்தும் உபயோகிக்கிறோம். சர்க்கரை நமக்குக் கரும்பிலிருந்து கிடைக்கிறது. எனவே, கரும்பு பயிரிடுவதனால் சர்க்கரை செய்யும் கைத்தொழிலும் விருத்தியடைகிறது.

2. பீகார், மைசூர், சென்னை இராச்சியங்களிலே சர்க்கரை மிகவும் அதிகமாக உற்பத்தி

செய்யப்படுகிறது. சர்க்கரையும் வெல்லமும் கருப்பஞ்சாற்றிலுல்தான் செய்யப்படுகின்றன. கரும்பு வெப்பமண்டலத்தில் மிகுதியும் பயிராகும். கரும்பை நன்செய் நிலத்தில்தான் பயிராக்குவார்கள். சிறுபான்மை புன்செய் நிலத்திலும் கரும்பைப் பயிராக்குவது உண்டு. ஐரோப்பாவில் 'பீட்டு' என்னும் கிழங்கிலுல் சர்க்கரை செய்யப்படுகிறது. இதிலிருந்து அதிகமான சர்க்கரை செய்யப்படுவதில்லை. இந்தச் சர்க்கரையின் இனிப்பும் குறைவானதே.

3. கரும்பிலிருந்துதான் அதிகமான சர்க்கரை கிடைக்கிறது. இந்தியா, தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, சுமத்திரா, ஜாவா, கியூபா, போர்னியோ முதலான இடங்களில் ஏராளமாகக் கரும்பை விளைவித்துச் சர்க்கரை செய்கிருர்கள்.

4. கரும்புப் பயிர் நல்ல உரமுள்ள நிலத்தில்தான் செழித்து வளரும். அதற்குத் தண்ணீரும் வெயிலும் வேண்டும். கரும்பு, நாணல், மூங்கில் என்பன ஓரினமாகும். கரும்பு மூங்கிலைப் போலக் கணுக்களையுடையது. கரும்பு ஆறடி முதல் பன்னிரண்டடி வரை உயர்ந்து வளரும். நன்கு செழித்து வளர்ந்த கரும்பில் நூற்றுக்கு இருபது பங்கு சர்க்கரை கிடைக்கும்.

5. செங்கரும்பு, வெண்கரும்பு, யானைக்கரும்பு, குச்சிக்கரும்பு, நாமதாரிக் கரும்பு

எனக் கரும்பில் பலவகை உண்டு. அவற்றுள் செங்கரும்பே சர்க்கரை செய்யப் பயன்படு-கிறது. செங்கரும்பு மிக்க சுவை உடையது. நன்கு முற்றிய கரும்புகளைக் கணுக்களு-டைய துண்டுகளாக்கி நடுவார்கள். ஒவ்வொரு கணுவிலிருந்தும் முளை தோன்றிக் குருத்து விட்டு முளைக்கும்.

6. கரும்பின் அடிப்பகுதி மிக்க சுவையா-யிருக்கும்; நுனிப் பகுதி உப்புக் கரிக்கும். ஆதலால் அதனைக் கழித்தெறிந்து விடுவர். கரும்பை வெட்டிக் கட்டுக்களாகக் கட்டி வண்டியிலேற்றி ஆலைக்கு அனுப்புவர்.

7. கரும்பாலையை மாடுகள் பூட்டிச் சுற்று வார்கள். மாடுகள் சுற்றும்பொழுது யந்திரத்தி லுள்ள உருளைகள் சுழலும். இவ்வுருளைகளின் நடுவில் கரும்புகளை வெட்டிக் கொடுப்பார்-கள். அப்போது அவை நசுங்குவதால் சாறு பிழியப்படும். சாற்றை அதற்குரிய கொப்பரை-யில் தேக்குவார்கள். சாறு பிழிந்த கரும்பின் சக்கை அடுப்பெரிக்க உதவும். கருப்பஞ்சாற்-றுக்கு 'இக்கு' என்று பெயர்.

8. கருப்பஞ் சாற்றைக் கொப்பறையி லிட்டுக் காய்ச்சுவார்கள். காய்ச்சும் பொழுது சிறிது சுண்ணும்பு நீரைக் கலப்பார்கள். அப்-பொழுது சாற்றிலிருக்கும் அழுக்குத் திரண்டு வரும். அவற்றை எடுத்தெறிவார்கள். இவ்வாறு

இரண்டு மூன்று முறை அழுக்கை நீக்கிய பிறகு சாறு பாகாய் மாறும். அதனை மரப்பலகைகளில் உள்ள குழிகளில் ஊற்றுவார்கள். அப்பாகு இறுகி வெல்லமாகும். பாகினைத் தொட்டிகளில் ஊற்றிக் கெட்டியாகாதவாறு தேய்த்து உதிரியாகச் செய்வதனால் **பழுப்புச் சர்க்கரை** உண்டாகிறது.

9. பழுப்புச் சர்க்கரையைக் கொப்பரைகளில் தண்ணீர் விட்டுக் கரைத்து, வடிகட்டிக் காய்ச்சுவார்கள். அது கொதிக்கும் பொழுது சில ரஸாயனப் பொருள்களைச் சேர்ப்பார்கள், அதனால் அதன் பழுப்பு நிறம் மாறி வெண்மை நிறம் பெறும்.

10. நமது நாட்டில் பீமன் பட்டினம், அஸ்கா, இராச மகேந்திரம், அஷ்டகிராமம், நெல்லிக்குப்பம், புகலூர் என்னும் இடங்களில் பெரிய சர்க்கரைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| அறுவகை | இராச்சியம் | ஏராளமாக | குருத்து |
| சுவைகள் | சாற்றினால் | ஓரினமாகும் | கழித்து |
| பலவகை | வெப்பமண்டலம் | கணுக்கள் | உருளை |
| கைத்தொழில் | கிழங்கு | செழித்து | உதிரி |
| ரஸாயனம் | பழுப்பு | பாகு | ஆலைகள் |

குறிப்பு :—ஆறு வகைச் சுவைகள் :

| | | |
|---|---|---|
| கைப்பு | உவர்ப்பு | புளிப்பு |
| கார்ப்பு | துவர்ப்பு | இனிப்பு |

## கேள்விகள் :

1. அறுவகைச் சுவைகள் எவை ?
2. சர்க்கரை எதிலிருந்து கிடைக்கிறது ?
3. கரும்பு எங்கெங்கு அதிகமாகப் பயிராகிறது ?
4. கரும்பைப் பயிராக்குவது எப்படி ?
5. வெளித்தேசங்களில் எங்கெங்குச் சர்க்கரை அதிகமாகக் கிடைக்கிறது ?
6. கரும்பின் வகைகளைக் கூறு.
7. சர்க்கரை செய்யும் முறையைக் கூறு.
8. நம் நாட்டில் சர்க்கரைத் தொழிற்சாலைகள் எங்கு உள்ளன ?

## பயிற்சி :


1 கைப்பு—சுண்டைக்காய்: இதுபோல எழுது:-

உவர்ப்பு ———
கார்ப்பு ———
துவர்ப்பு ———
புளிப்பு ———
இனிப்பு ———

2. உன் சாப்பாட்டில் அறுவகைச் சுவைக்கும் தனித்தனி பொருள்களை எழுது.

3. ஏராளம் × குறைவு : இது போல எழுது :—

வெப்பம் × ———
பல வகை × ———
நடுதல் × ———



## 20. மீன்

1. பிள்ளைகளே, நீங்கள் தண்ணீரில் வாழும் ஜந்துக்களைப் பார்த்திருக்கிறீர்களா? நீரில் மீன், தவளை, நண்டு, பாம்பு முதலியவை உண்டு. மீனில் பல வகையுண்டு. படத்திலுள்ள மீன் வாழைக்காய் போல நீண்டு உருண்டு இருக்கிறது அல்லவா? இதன் உடல் முழுவதும் செதில்கள் உண்டு.

2. மீனின் கழுத்தண்டை ஏதோ மூடி மூடித் திறக்கிறது அல்லவா? அதுதான் செவுள். அது ஏன் மூடி மூடித் திறக்கிறது தெரியுமா? அது மூச்சு விடுகிறது. மூச்சு விடுவதென்றால் என்ன? காற்றை உட்கொண்டு வெளி விடுவது. அது போல எல்லா உயிரும் மூச்சு விடுவதுண்டு. மீன் தண்ணீருக்குள் இருப்பதால் அதற்குத் தனியே காற்று அகப்படாது.

3. மீன் தண்ணீரை உறிஞ்சும்; அதில் உள்ள காற்றைப் பிரித்துக்கொள்ளும்; தண்ணீரை மாத்திரம் செவுளின் வழியாக வெளியே விடும். அதனால்தான் செவுள் திறந்து திறந்து மூடுகிறது. மீனின் வால் புறத்தில் விசிறிபோல இருக்கிறதே, அதுதான் சிறகு. கழுத்துப் பக்கத்திலும் இரண்டு சிறகுகள் உண்டு. அந்த மூன்று சிறகுகளும் இல்லாவிட்டால் மீன் வலப்புறம் இடப்புறம் திரும்ப முடியாது.

4. முதுகிலும் வயிற்றிலும் சிறகுகள் உண்டு. அவை இல்லாவிட்டால், மீன் பக்கத்தில் சாய்ந்து, மிதந்துவிடும். மீனின் உடலில் ஒரு வகையான நெய்ப்பசை உண்டு. ஆகையினால்தான் மீனின் உடலில் தண்ணீர் ஒட்டுவதில்லை.

5. மீன், தண்ணீரில் இருப்பதால் நமக்கு மிகவும் நன்மை உண்டு. தண்ணீரில் மனிதர்கள் குளிக்கிறார்கள்; உடைகளைத் துவைக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதால் நீரில் அழுக்குச் சேரும் அல்லவா? அந்த அழுக்கை மீன் தின்றுவிடுகிறது. அதனால்தான் நீர் சுத்தமடைகிறது. நீரைச் சுத்தம் செய்வதால் மீனை **நீர்த்தோட்டி** என்று சொல்லலாம் அல்லவா?

| | | |
|---|---|---|
| ஐந்து | மூச்சு | சாய்ந்து |
| முழுதும் | அகப்படாது | மிதந்து |
| செதில்கள் | உறிஞ்சும் | நெய்ப்பசை |
| மூடிமூடி | பிரித்து | குளிக்கிறார்கள் |
| செவுள் | திறந்து | துவைக்கிறார்கள் |

### பயிற்சி :

**விளக்கம் :—**தண்ணீர்+இல்=தண்ணீரில், கழுத்து +அண்டை=கழுத்தண்டை, இருப்பது+ஆல்=இருப்பதால், வலம்+புறம்=வலப்புறம், ஒட்டுவது+இல்லை= ஒட்டுவதில்லை, சுத்தம்+அடைகிறது=சுத்தமடைகிறது.

**பிரித்து எழுது :—**

தண்ணீர், விடுவதென்றால், இடப்புறம், இப்படியெல்லாம்.

**சேர்த்து எழுது :—**

முதலியவை உண்டு. உருண்டு இருக்கிறது.அதில் உள்ள.

**எதிர்மொழி எழுது:—**

மூடி, உள், கொள்ளும், வலம், நன்மை.

கீழே பெரிய எழுத்திலுள்ள சொல்லுக்குப் பதில் வேறு சொல் எழுது ;—

1. தனியே காற்று **அகப்படாது,**
2. வலப்புறம் **திரும்ப முடியாது.**
3. மீனினால் நமக்கு மிகவும் **நன்மை.**
4. அழுக்கை மீன் **தின்றுவிடுகிறது.**
5. மீனில் **பல வகை** உண்டு.

### கேள்விகள்:

1, மீன் எங்கே வசிக்கும் ?
2. மீனின் செவுள் எதற்கு உதவுகிறது ?
3. வால் சிறகினால் மீனுக்கு என்ன நன்மை ?
4. மீனின் உடலில் தண்ணீர் ஏன் ஒட்டுவதில்லை ?
5. எதனால் மீனுக்கு நீர்த்தோட்டி என்னும் பெயர் பொருந்தும் ?

# 21. காலம்

முன் ஒரு பாடத்தில் தொழிலைக் காட்டும் வினைச்சொல்லைப் பற்றி அறிந்தோம். அந்தத்தொழில் முன் நடைபெற்றதையும், இப்பொழுது நடக்கிறதையும், இனி நடக்கப்போவதையும் குறிப்பனவாக அமையலாம். அவ்வாறு குறிப்பது காலத்தைக் காட்டுகிறது அல்லவா? காலம் மூன்று வகைப்படும். நடந்ததைக் குறிப்பது **இறந்த காலம்** எனப்படும். நடக்கிறதைக் குறிப்பது **நிகழ் காலம்** எனப்படும். நடக்கப் போவதைக் குறிப்பது **எதிர் காலம்** எனப்படும். சிறுவர்களே, கீழ் வரும் வாக்கியங்களில் கூறப்படும் காலத்தைக் கவனியுங்கள் :

1. முன் ஒரு காலத்தில் அயோத்தியைத் தசரதர் ஆண்டார்.
2. எங்கள் பள்ளிக்கூடம் திறந்து பத்து நாட்கள் ஆயின.
3. பாத்திரத்தில் வைத்திருந்த பாலைப் பூனை குடித்தது.
4. எனக்கு ஆசிரியர் செவ்வையாகப் பாடம் கற்பிக்கிறார்.
5. என் அண்ணனிடமிருந்து தினந்தோறும் கடிதம் வருகிறது.
6. எங்கள் வீட்டில் தினமும் ஹிந்து பத்திரிகை வாங்குகிறோம்.

7. நானும் இராமனும் நாளைக்குக் கடற்-
கரைக்குப் போவோம்.

8. என் மாமா நாளைக்குப் புத்தகம் வாங்-
கித் தருவார்.

9. நாளைக்கு நான் பள்ளிக்கூடச்
சம்பளம் கட்டுவேன்.

10. என் தந்தையார் பம்பாய்க்கு நாளை
செல்வார்

**பயிற்சி :**

கீழ்வரும் பகுதியிலிருந்து வினைச்சொற்களை எடுத்து எழுதிக் காலத்தையும் எழுது:—

ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதில் பல பறவைகள் வசித்தன, அம்மரத்தின் பொந்தில் ஒரு கிழக் கழுகும் வசித்து வந்தது. அது நகமும் கண்ணும் இழந்தது. அதற்கு மற்றப் பறவைகள் உணவு கொடுத்தன. கழுகு பறவைகளின் குஞ்சுகளைக் காத்து வந்தது.

ஒரு பூனை அங்கு வந்தது. பூனை கழுகினிடம் நல்ல வார்த்தைகள் பல சொல்லிச் சிநேகம் செய்துகொண்டது. சில நாட்கள் அக்கழுகுடன் அது தங்கிற்று. பூனை தினமும் பறவைகளின் குஞ்சுகளை ஒவ்வொன்றாகத் தின்று வந்தது. பறவைகள் குஞ்சுகளைக் காணாது வருந்தின; கழுகின் பொந்தண்டை வந்து பார்த்தன. அங்கு எலும்புகள் கிடந்தன. கழுகே குஞ்சுகளைத் தின்றது என அவை எண்ணின. அவை அக்கழுகைக் கொன்றன. பூனை அதை அறிந்து ஓடிப் போயிற்று.

அறியாத ஒருவனுக்கு இடம் கொடுத்தால் ஆபத்து உண்டாகும்.

இக்கதையைப் படி: (4 நிமிஷங்கள்) சொல்; எழுது.



## 22. திறமையுள்ள நாய்

1. திருவண்ணாமலை என்பது சிறந்த நகரம். அந்த நகரத்தைச் சுற்றிலும் மலைகள் உண்டு. மலை நாட்டில் காடுகளும் இருக்கும் அல்லவா? அப்படிப்பட்ட இடத்தில் ஊசாம்பாடி என்று ஓர் ஊர் உண்டு. அது மிகவும் சிறிய கிராமம். அவ்வூர் திருவண்ணாமலைக்கு ஆறு மைல் தூரத்தில் இருக்கிறது.

2. முன்பு ஊசாம்பாடியில் ஐயாசாமி என்பவர் கிராமக் கணக்கப்பிள்ளை வேலையில் இருந்தார். ஐயாசாமி சுறுசுறுப்பு உடையவர்; எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்வார்; எதிலும்

கெட்டிக்காரரர்; நுட்பமான அறிஞர்; எல்லாருக்கும் உபகாரி.

3. ஐயாசாமி, ஒரு நாயை வளர்த்தார். அதை அவர் தம் குழந்தைபோலக் காப்பாற்றினார். அதுவும் அவரிடம் அதிக அன்பாய் இருந்தது. ஐயாசாமி சவாரிக் குதிரை வைத்திருந்தார். சிலசமயம் நாயைக் குதிரை மேல் ஏற்றிச் செல்வதும் உண்டு. ஒரு நாள் ஐயாசாமி அவசரமாகத் திருவண்ணாமலைக்குப் போகப் புறப்பட்டார். அப்போது இரவு நேரம். இருட்டுக் காலமாகவும் இருந்தது. அவர் கையில் ஓர் ஆயிரம் ரூபாய் கொண்டு போனார்; வழக்கம் போல நாயையும் கூட்டிச் சென்றார்.

4. குதிரை வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. நடுவழியில் சில திருடர்கள் பதுங்கியிருந்தார்கள். அதை நாய் மோப்பத்தால் அறிந்துகொண்டது. குதிரையின்மேல் இருந்த நாய் திடீரென்று கீழே குதித்தது. குதிரையை வழி மறித்தது; பலமாகக் குரைத்தது. ஆனால், அதன் குறிப்பை ஐயாசாமி அறிந்துகொள்ளவில்லை; பின்னும் குதிரையை வேகமாக நடத்தினார்.

5. சிறிது தூரம் சென்றதும் ஐயாசாமியைத் திருடர்கள் மடக்கிக்கொண்டார்கள்; பணத்தையும் உடைகளையும் பிடுங்கிக்கொண்டார்கள்; எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு

விரைந்து போனார்கள். நாய் அங்கேயே நின்றுவிட்டது. ஐயாசாமி அதைக் கவனிக்கவில்லை.

6. அவர் திருவண்ணாமலை சென்று அடுத்த நாள் திரும்பினார். திருடு போன இடத்தில் நாய் படுத்திருந்தது. எஜமானைக் கண்ட நாய் எழுந்து எதிரில் போய் நின்றது. உடனே அவர் கீழே குதித்தார். நாய் வேறு ஒரு வழியைப்பற்றிச் செல்லக் குறிப்பிட்டது. அவர் உடனே குதிரையை அவ்வழியாகச் செலுத்தினார்; சுமார் இரண்டு மைல் தூரம் காட்டுக்குள் சென்றார். அங்கே நாய் சில குடிசைகளைச் சுற்றிச் சுற்றிக் குரைத்தது. அதை அறிந்தார் ஐயாசாமி, திருடர்களைப்பற்றிப் பொருளைக் கண்டுபிடித்தார். ஒன்று விடாமல் வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்.

| | | |
|---|---|---|
| திறமை | காப்பாற்றினார் | பின்னும் |
| சுற்றிலும் | இருட்டுக்காலம் | மடக்கி |
| மலை நாடு | நடுவழி | பறிகொடுத்து |
| கிராமம் | திருடர்கள் | கவனிக்க |
| கணக்கப் பிள்ளை | திடீரென்று | பற்றி |
| சுறுசுறுப்பு | குதித்தது | குடிசைகளை |
| நுட்பமான | மறித்தது | குரைத்தது |

## பயிற்சி :

**விளக்கம்** :—திரு + அண்ணாமலை = திருவண்ணாமலை. அ + ஊர் = அவ்வூர். ஒழுங்கு + ஆக = ஒழுங்காக, அவர் + இடம் = அவரிடம், அன்பு + ஆய் = அன்பாய், வைத்து + இருந்தார் = வைத்திருந்தார்.

**பிரித்து எழுது :—**

காடுகளும், இருட்டுக்காலம், பதுங்கியிருந்தார்கள். அங்கிருந்த.

**சேர்த்து எழுது :—**

மலைகள் உண்டு, தூரத்தில் இருக்கிறது, போன இடத்தில்

**எதிர்மொழி எழுது :—**

பின்னாலே, இருள், போய்.

**கீழே பெரிய எழுத்திலுள்ள சொல்லுக்கு வேறு சொல் எழுது:-**

1. அது மிகவும் சிறிய **கிராமம்.**
2. ஐயாசாமி ஊசாம்பாடியில் **வசித்திருந்தார்.**
3. நாயைக் குழந்தையைப்போலக் **காப்பாற்றினார்.**
4. நாயையும் **கூட்டிச்** சென்றார்.
5. **எல்லாவற்றையும்** பறிகொடுத்தார்.

## கேள்விகள்:

1. ஊசாம்பாடி எங்கே இருக்கிறது ?
2. ஐயாசாமி வேலை என்ன ?
3. திருடரை ஐயாசாமி எப்படி அறிந்தார் ?

## யோசனை :

நாய் திருடர் இடத்தை எப்படி அறிந்திருக்கும் ?

## இலக்கணம் :

நாய் என்னும் சொல் ஒன்றைக் குறிக்கிறது : அது ஒருமைச் சொல். நாய்கள் என்னும் சொல் பலவற்றைக் குறிக்கிறது; அது பன்மைச் சொல். இப்பாடத்திலிருந்து சில ஒருமைச் சொற்கள், பன்மைச் சொற்களை எடுத்து எழுது.



## 23. நல்ல கள்ளன்

1. முன் ஒரு காலத்தில் சிகந்தர் என்னும் அரசர் ஒருவர் இருந்தார். அவர் தேக திடம் உள்ளவர்; சண்டை செய்வதில் சமர்த்தர். ஆகையால், பல நாடுகளை ஜெயித்தார். ஆயினும் ஒரு நாளும் சும்மா இருக்கமாட்டார். எப்பொழுதும் போரும் படையுமாகவே இருப்பார்.

2. அவருடைய நாட்டில் ஒரு திருடன் இருந்தான். அவனும் பெரிய வீரன்; அஞ்சாத நெஞ்சம் உடையவன்; பெரிய பெரிய மாளிகையிலும் திருடுவான். ஆனால், அவன் ஏழைகளை வருத்தமாட்டான். திருடி வந்த பொருளைப் பல ஏழைகட்குப் பங்கிட்டுவிடுவான்.

3. அந்தத் திருடனைப் பிடிக்க அரசர் நினைத்தார். பல நாட்கள் வரையில் அவன் அகப்படவேயில்லை. அரசர், ஒரு பெரிய சேனையை அனுப்பினர், அவர்கள் அக்கள்வனைப் பற்றினார்கள். விலங்கிட்டு அழைத்து வந்து, அரசருக்கு எதிரில் நிறுத்தினார்கள். அவனைப் பார்த்தவுடன் மன்னருக்குக் கோபம் பொங்கிற்று. "கொடியவனே, உனக்குக் கொலைத் தண்டனை விதிக்கப் போகிறேன்," என்றார். அப்போது திருடன் அரசரைப் பார்த்து, "வேந்தே, வீண் கோபம் வேண்டா. நாம் இருவரும் சிறிது நேரம் உரையாடல் வேண்டும். அதன் பின் உங்கள் எண்ணப்படி தண்டித்துவிடுங்கள்," என்றான்.

4. அதைக் கேட்ட அரசர், "அப்படியே செய். நீ என்ன பேச விரும்புகிறாய் ?" என்றார். இருவரும் உரையாடலைத் தொடங்கினார்கள்.

**திருடன் :**—என் மீது ஏதாவது குற்றம் உண்டா ?

**அரசர் :**—ஏன் இல்லை ? நீ கொள்ளையடிப்பது குற்றமல்லவா ?

**திரு :**— அப்படியானால், நீங்களுந்தான் கொள்ளையடிக்கிறீர்கள். அது பிழைதானே ?

**அர :**—நான் நாட்டின் நன்மைக்காக அப்படிச் செய்கிறேன்.

திரு :—நானும் ஏழைகளுக்கு உதவவே திருடுகிறேன்.

அர :—நீ பணக்காரர் மனத்தை வருந்து-கிறாய் அல்லவா ?

திருடன் :— நீங்களுந்தான் மன்னர்களின் மனத்தை வருத்துகிறீர்கள்.

அர :—அப்படியானால், நானும் உன்னைப் போல் குற்றவாளியா ?

திரு :—நான் அப்படிச் சொல்லவில்லை. நான் வயிற்றுக்கு இல்லாமல் திருடுகிறேன். திருடியதைப் பட்டினி கிடக்கும் எளியவர்-களுக்கும் பங்கிட்டுத் தருகிறேன். நீங்கள் பெரும்பொருள் வைத்திருக்கிறீர்கள். ஆனால், போதும் என்று இருப்பதில்லை. பேராசையால், என்னைவிட நீங்களே பெரிய குற்றவாளி என்பது என் எண்ணம்.

(என்று அஞ்சாமல் பேசினான்.)

5. அதைக் கேட்ட அரசருக்குப் புத்தி வந்தது. அது முதல் அவர், எந்த நாட்டையும் கொள்ளை அடிப்பதில்லை. ஏழைகளையும் காப்-பாற்றி வந்தார். திருடன், பலருக்கு நன்மை செய்தான் ; தானும் வருத்தமின்றி வாழ்ந்-தான். அவன் நல்ல கள்ளன் அல்லவா?

| | | |
|---|---|---|
| தேகதிடம் | விலங்கிட்டு | குற்றம் |
| சமர்த்தன் | பொங்கியது | கொள்ளை |
| ஜயித்தான் | தண்டனை | வயிற்றுக்கு |
| படையும் | விதிக்க | பட்டினி |
| மாளிகை | வேந்தே | எளியவர்க்கு |
| பங்கிட்டு | உரையாடல் | பெரும்பொருள் |

## பயிற்சி :

**விளக்கம் :**—தேகம் + திடம் = தேகதிடம். போர் + உம் = போரும். சேனை + ஐ = சேனையை. விலங்கு + இட்டு = விலங்கிட்டு. உரை + ஆடல் = உரையாடல்.

**பிரித்து எழுது :**—

மாளிகையிலும். அகப்படவேயில்லை. மொழியாட.

**சேர்த்து எழுது :**—

ஒருவன் இருந்தான், நெஞ்சம் உடையவன், அரசன் எதிரில்.

**எதிர்மொழி எழுது :**—

ஜயித்தான், நன்மைக்காக, குற்றவாளி, ஏழை,

**பெரிய எழுத்துக்களில் உள்ள சொல்லுக்குப் பதில் மொழி எழுது :**—

1. சிகந்தர் தேக **திடம்** உள்ளவர்.
2. எப்பொழுதும் **படையும் போருமாகவே** இருப்பார்.
3. அரசர் **சேனையை அனுப்பினர்.**

4. கள்ளனை அரசருக்கு எதிரில் நிறுத்தினார்கள்.
5. அன்று முதல் அரசருக்குப் புத்தி வந்தது.

விலங்கு—இரு பொருள் எழுது.

## கேள்விகள் :

1. சிகந்தர் என்பவர் யார் ?
2. திருடனைப் பிடிக்கச் சிகந்தர் என்ன செய்தார் ?
3. திருடன் ஏழைகளுக்கு எப்படி உதவினான் ?

## யோசனை :

திருடன் செய்த தந்திரம் என்ன ?

# 24. சீனர்கள்

1. நீங்கள் சீனர்களைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் தெருக்களில் பட்டு விற்றுக் கொண்டு செல்வார்கள். அவர்கள் முதுகில் பெரிய மூட்டை இருக்கும். அவர்களைக் கண்டதும் சிறுவர்கள் 'சிங் சிங்சைனு' என்றுகூறி ஆரவாரம் செய்வார்கள். அவர்கள் சிறுவர்களுக்கு விளையாட்டுக் காட்டிச் சிரித்துக் கொண்டு செல்வார்கள். அவர்கள் 'ஸில்க்' என்று கூவுவதே விநோதமாய் இருக்கும்.



2. சீனர் பிற நாட்டு மக்களோடு மிகவும் அன்பு உடையவர்களாய் இருப்பார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே சீனர்கள் சிறந்த நாகரிகம் படைத்திருந்தார்கள்; செல்வத்திலும் சிறந்திருந்தார்கள். அவர்கள் பட்டு உடைகளை அணி-



வார்கள். அவர்கள் வீடுகள் அழகாகப் பூந்தோட்டத்திற்குள் அமைந்திருக்கும்.

3. சீனர்கள் தலை மயிரை வெட்டிக்கொள்வது இல்லை; பின்னித் தொங்கவிட்டுக்கொள்வார்கள். ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே அவர்கள் சிவப்புக் களிமண்ணால் கூஜா, ஜாடி முதலியன செய்து வந்தனர். மூவாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பே அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியும். அவர்கள் மெருகு இட்ட ஆமை ஓட்டின் மேல் எழுதி வந்தார்கள். குழிமுயலின் வாலை அவர்கள் எழுதுகோலாகக் கொண்டார்கள். அவர்கள் மொழியிலுள்ள எழுத்துக்கள் சித்திர வடிவு உடையன.

4. சீனர்கள் அரசரிடம் விசுவாசம்



உடையவர்கள். அவர்கள் தேசபத்தியிலும் சிறந்தவர்கள். அவர்கள் தாய் தந்தையரிடம் அன்பும் மரியாதையும் உடையவர்கள். ஒருவரோடு ஒருவர் சகோதரர் போல அன்புடன் பழகுவார்கள். அவர்கள் உண்மையைப் பேசுபவர்கள்: பிறரிடம் உண்மையான சிநேகிதம்

கொள்வார்கள்; எல்லா மக்களிடமும் அன்பு உடையவர்கள்.

5. அவர்கள் நாட்டில் மஞ்சள் நதி, யாங்ட்ஸி என்ற பெரிய ஆறுகள் உள்ளன; சிறந்த மலைகள் உள்ளன. ஆயிரத்தெழுநூறு வருடங்களுக்கு முன் புத்த மதம் சீனாவில் பரவியது. அதனால் சீனாவின் மலைகளிலுள்ள பாறைகளில் புத்தர் சிலை செதுக்கப்பட்டிருத்தலை எங்கும் காணலாம்.

6. அந்நாட்டில் பல ஜாதிக் குரங்குகள் இருக்கின்றன. சீனர்கள் நீண்ட விசைக்கோலால் உணவை உண்பது மிகவும் விநோதமாக இருக்கும். சீனச் சிறுவர்கள் கால்பந்தாடுதல், காற்றாடி விடுதல், ஊஞ்சல் ஆடுதல், ஒளிந்து ஓடிப் பிடித்தல் என்ற விளையாட்டுக்களை விளையாடுவர். சிறுவர்கள் ஐந்து, ஆறுவது வயதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

7. சீனர்கள் உண்மை பேசுதலைப் பெரிது என மதிப்பார்கள். வியாபாரிகள் வாய்ச்சொல் தவறாதவர்கள். குடியானவர்களும் தொழிலாளிகளும் சுறுசுறுப்பு உடையவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் உபகாரம் செய்துகொள்வார்கள்.

| | | | |
|---|---|---|---|
| தெருக்கள் | விநோதம் | விசுவாசம் | சிநேகிதம் |
| ஆரவாரம் | நாகரிகம் | மரியாதை | செதுக்கப்பட்டு |
| 'ஸில்க்' | அணிவார்கள் | தேசபத்தி | மதிப்பார்கள் |
| கூவுவது | மெருகு | சகோதரர் | வாய்ச்சொல் |
| உபகாரம் | பரவியது | பழகுவார் | படைத்திருந்தனர் |

## கேள்விகள் :

1. சீனர் இந்தியாவின் தெருக்களில் என்ன செய்வார்கள் ?
2. சீனர் வீடு, உடை, அவர்கள் அறிந்தவை பற்றி எழுது.
3. சீனரிடம் காணப்படும் குணங்கள் யாவை ?
4. சீனுவிலுள்ள ஆறுகளில் இரண்டு கூறு.
5. சீனர்களிடம் எது விநோதமாய் இருக்கும் ?
6. சீனுவிலுள்ள மலைகளில் எதனைக் காணலாம் ?
7. சீனச் சிறுவர் விளையாட்டுக்கள் யாவை ?
8. சீனர் எவற்றைப் பெரிதும் மதிப்பர் ?
9. சீன வியாபாரிகளைப்பற்றி நீ என்ன அறிவாய் ?
10. சீனக் குடியானவர்கள் தொழிலாளிகளைப் பற்றி நீ என்ன அறிவாய் ?

## பயிற்சி—1

கோடிட்ட இடங்களை நிரப்பு :—

1. அவனைக்——சிறுவர்கள்————என்று கூறி ——செய்வார்கள்.

2. சீனர்கள் சிறந்த——படைத்திருந்தனர்.

3. குழிமுயலின் வாலை அவர்கள்————.

## பயிற்சி—2

கீழ் வரும் சொற்களை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது:—

ஆரவாரம், கூவுவது, உபகாரம், நாகரிகம், பரவியது, பழகுவார், மதிப்பார்கள், வாய்ச்சொல், சிநேகிதம், விநோதம்.



# 25. பரதன்

1. முன் வகுப்பில் இராமனைப் பற்றி ஒரு கதை படித்தோம் அல்லவா? அவனுக்கு மூன்று தம்பிமார் உண்டு. அவர்கள் பெயர் பரதன், இலக்குமணன், சத்துருக்கினன் என்பனவாகும்.

2. இராமன் தம்பிமார்களிடம் அன்பாய் இருந்தான். அவர்களும் அவனிடம் மரியாதையாய் நடந்து வந்தார்கள்.

3. இராமன் தந்தை சொற்படி காட்டில் வசிக்கப் போனான். அப்போது பரதன் பாட்டனார் வீடு சென்றிருந்தான். திரும்பி வந்து

தமையன் காடு சென்றதைக் கேள்விப்பட்-டான்; அதனால், மிகுந்த வருத்தம் அடைந்-தான். தாய் தேடி அளித்த அரசச் செல்வத்தை அவன் விரும்பவில்லை. தன் அண்ணனைத் தேடித் திரும்ப அழைத்து வரப் புறப்-பட்டான்.

4. போன பரதன் கங்கையாற்றின் தென்கரையில் இராமனைக் கண்டான். திரும்பி வருமாறுவேண்டினன்; கால்களில் விழுந்தான்; கண்ணீர் விட்டுக் கதறினன். "அண்ணா, நீங்கள் திரும்பி வாராவிட்டால் நான் நாட்டுக்-குப் போகமாட்டேன். உம்முடன் காட்டுக்குத்-தான் வருவேன்," என்றான்.

5. இராமன் அவனைப் பார்த்து, "தம்பி, தந்தை சொல்லிய மொழி தவற மாட்டேன். பதினன்கு வருஷத்தையும் பதினன்கு நாட்-களாக நினைத்திரு. நாட்டைப் பத்திரமாக ஆட்சி செய்; வருந்தாமல் திரும்பிப்போ. பதினன்கு வருடங்களையும் விரைவில் கழித்து-விட்டு நான் வந்துவிடுகிறேன்; பெரியவனாகிய என் சொல்லைக் கேள்," என்றான்.

6. என்ன செய்வான் பரதன்! இன்னும் அதிகமாக அழுதான். "அண்ணா, உங்கள் பாதத்தில் உள்ள மிதியடிகளைத் தாருங்கள். அவற்றைச் சிம்மாசனத்தில் வைக்கிறேன்.

அவைகளுக்கு முடி சூட்டுகிறேன். நான் வேலைக்காரனைப் போல ராஜ்ய காரியங்களைச் செய்கிறேன்," என்றான்.

7. அதைக் கேட்ட இராமனுக்கு மனம் உருகியது. அப்படியே கொடுத்தான். பரதன் இராமனுடைய மிதியடிகளைத் தலைமீது சுமந்து சென்றான். அண்ணனைக் காணும் வரையில் அவைகளையே அண்ணனாக மதித்திருந்தான். பரதனுடைய அன்பைப் பார்த்தீர்களா! நாமும் நம் உடன் பிறந்தவர்களிடம் அன்பாய் இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| மரியாதை | கதறினான் | சிம்மாசனம் |
| கேள்விப்பட்டான் | பத்திரமாக | முடி |
| பட்டத்தை | ஆட்சி | சூட்டுகிறேன் |
| கங்கையாறு | பாதத்தில் | ராஜ்யம் |
| கண்ணீர் | மிதியடி | காரியங்களை |

பயிற்சி :

விளக்கம் :—பத்து + நான்கு = பதினான்கு. சென்று + இருந்தான் = சென்றிருந்தான். தெற்கு + கரை = தென் கரை. கண் + நீர் = கண்ணீர், நினைத்து + இரு = நினைத் திரு. ராஜ்யம் + காரியம் = ராஜ்யகாரியம்.

முடி—இரண்டு அர்த்தம் எழுது.

**பெரிய எழுத்துள்ள மொழிகளை நீக்கிப் பதில் மொழி எழுது:-**

1. இராமன் அன்பாய் இருந்தான்.
2. மிகுந்த வருத்தம் அடைந்தான்.
3. கங்கை நதியின் தென்கரை
4. அவன் தம்பியைத் தேற்றினான்.

**கேள்விகள் :**

1. இராமனைப்பற்றி முன்னே படித்த கதை எது ?
2. இராமன் காடு போகும்போது பரதன் எங்கே சென்றிருந்தான் ?
3. பரதன் இராமனை எங்கே சந்தித்தான் ?
4. இராமன் பரதனுக்கு என்ன தைரியம் சொன்னான் ?
5. இப்பாடத்திலிருந்து பெயர் ஐந்தும் வினை ஐந்தும் எடுத்து எழுது.

## 26. புகை வண்டி

**மாமன்** :—இராமா, நீ எப்போதாவது புகை வண்டியில் ஏறியிருக்கிறாயா ?

**இராமன்** :—புகை வண்டியா? அப்படி என்றால் எனக்குத் தெரியவில்லை மாமா.

**மாமன்** :—ஆனால், ரயில் வண்டி என்றால் உனக்குத் தெரியும் அல்லவா ?


**இரா** :—ஆம், அது தெரியும்.

**மாமன்** :—ரயிலுக்குத்தான் புகை வண்டி என்பது பெயர்.

இரா :—அதற்குப் புகை வண்டி என்று ஏன் பெயர் வந்தது ?

மாமன்:—அது போகும் போது புகையை விட்டுக்கொண்டு போகிறதல்லவா ? ஆகையி-ஞல் அப்பெயர் வந்தது.

இரா :—சரிதான், நான் புகை வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறேன்.



மாமன் :—புகை வண்டிக்கும் மற்ற வண்டிக்கும் என்ன வேறுபாடு ? சொல்.

இரா :—புகை வண்டி தண்டவாளத்தின் மீதுதான் போகும் ; மற்ற வண்டிகள் எங்கும் போகும்.

**மாமன்** :—அப்படியா ? தண்டவாளத்தின் மீது போகும் வண்டி வேறென்று இருக்கிறது. அது உனக்குத் தெரியாது.

**இரா** :—தெரியும் ; சென்னையில் பார்த்தேன். அதன் பெயர் டிராம். அதை மின்சார வண்டி என்று சொல்லலாம்.

**மாமன்**:—ஆம்; மெய்தான். புகை வண்டி எதன் சத்தியால் ஓடுகிறது ?

**இரா** :—அது நீராவியின் சத்தியால் ஓடுகிறது.

**மாமன்**:-அவ்வண்டியிலுள்ளவர்களைப்பற்றி உனக்குத் தெரியுமா ?

**இரா** :—தெரியும் மாமா. எஞ்சினை ஓட்டுகிறவர் **டிரைவர்**. வண்டியை விடவும் நிறுத்தவும் உத்தரவு செய்பவர் **கார்டு**.

**மாமன்** :—ரயிலில் யாரும் ஏறிப் போகலாம் அல்லவா ?

**இரா**:—அது முடியாது ; பணம் கொடுத்துப் பிரயாணச்சீட்டு வாங்கினவர்கள் ஏறிச் செல்லலாம்.

**மாமன்** :—ரயிலில் எத்தனை விதம் உண்டு என்பது உனக்குத் தெரியுமா ?

**இரா** :—அது எனக்குத் தெரியாது மாமா.

**மாமன்** :—சுமை ஏற்றும் வண்டி, ஆள் ஏறும் வண்டி என்று இரு வகை உண்டு. ஆள் ஏறும் வண்டியில் பல விதப் பெட்டிகள் உண்டு.

**இரா** :—மாமா, நானும் அப்பாவும் ஒரு நாள் ரயில் ஏறிப்போனேம். அந்த ரயிலில் ஓர் அழகான பெட்டி இருந்தது. அதில் நான் ஏறப் போனேன். "அதில் நாம் ஏறக் கூடாது," என்று அப்பா சொன்னர். அது ஏன் மாமா ?

**மாமன்** :—ரயிலில் மூன்று வகைப்பெட்டி-கள் உண்டு. அவை இரண்டாம் வகுப்பு, இடை வகுப்பு, மூன்ரும் வகுப்பு, என்பன. குறைந்த பணம் கொடுத்தவர்கள் மூன்ரும் வகுப்பில் ஏறவேண்டும். அதைவிட இடை வகுப்புக்குப் பணம் அதிகம். அதிலும் இரண்-டாம் வகுப்புக்கு மிகுதி.

**இரா** :—ஏன் அவைகளுக்கு மாத்திரம் பணம் அதிகம் ?

**மாமன்** :- அப்பெட்டிகள் சுத்தமாய் இருக்-கும். உட்காரும் இடத்திலும் சாயும் இடத்தி-லும் மெத்தை இருக்கும். மின்சார விசிறிகள் காற்றை வீசிக்கொண்டே இருக்கும்.

இரா :—மாமா, நாம் ஒரு நாளைக்கு உயர்ந்த பெட்டியில் ஏறிச் செல்லலாமா ?

மாமன் :—நீ கெட்டிக்காரனாகப் படித்தால் உத்தியோகம் கிடைக்கும்; பணம் அதிகம் சம்பாதிப்பாய். அப்போது அந்தப் பெட்டியில் ஏறிச் செல்லலாம்.

இரா :—ஆனால், நான் அக்கறையாகப் படிப்பேன்.

மாமன் :—சரி, அப்படியே செய்.

| | | |
|---|---|---|
| ரயில் | சத்தி | மிகுதி |
| கம்பி | இஞ்சின் | சாயும் இடம் |
| டிராம் | டிரைவர் | மெத்தை |
| மின்சாரம் | உத்தரவு | சம்பாதிப்பாய் |
| நீராவி | கார்டு | அக்கறையாக |

## பயிற்சி :

**விளக்கம் :**—எப்போது + ஆவது = எப்போதாவது, வண்டி + இல் = வண்டியில், போகிறது + அல்லவா = போகிறதல்லவா, வேறு + ஒன்றும் = வேறொன்றும், இரண்டு + வகை = இரு வகை, அக்கறை + ஆக = அக்கறையாக.

**தடித்த எழுத்துள்ள மொழியை நீக்கி எதிர் மொழியை எழுது :—**

1. நான் வண்டியில் ஏறினேன்.
2. புகை வண்டி வேகமாக ஓடும்.

தந்தை தாய்ப்பேண்.
நன்றி மறவேல்.
பருவத்தே பயிர்செய்.
மன்றுபறித்து உண்ணேல்.
வஞ்சகம் பேசேல்.
கடிவது மற.
காப்பது விரதம்.
கிழமைப் படவாழ்.
கீழ்மை அகற்று.
குணமது கைவிடேல்.
கூடிப் பிரியேல்.
கெடுப்பது ஒழி.
கேள்வி முயல்.
கைவினை கரவேல்.
கொள்ளை விரும்பேல்.
கோதாட்டு ஒழி.
கௌவை அகற்று,
சக்கர நெறிநில்.
சித்திரம் பேசேல்.

# 2. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
6. கிட்டா தாயின் வெட்டென மற.
7. கீழோர் ஆயினும் தாழ வுரை.
8. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
9. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
10. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
11. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
12. சுற்றத்திற்கு அழகு சூழ விருத்தல்.
13. சூதும் வாதும் வேதனை செய்யும்.
14. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
15. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
16. தாய்சொல் துறந்தால் வாசகம் இல்லை.
17. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
18. தீராக் கோபம் போராய் முடியும்.
19. தேடா தழிக்கிற் பாடாய் முடியும்.
20. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
21. தோழ ரேடும் ஏழைமை பேசேல்.
22. நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.
23. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.
24. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
25. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.
26. நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை.

27. பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்.
28. பாலோடு ஆயினும் காலம் அறிந்துஉண்.
29. பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.
30. மருந்தே யாயினும் விருந்தோடு உண்.
31. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.
32. மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.
33. மேழிச் செல்வம் கோழை படாது.
34. வளவ னாயினும் அளவறிந்து அழித்துஉண்.
35. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
36. ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்.

---

## 3. உலக நீதி

1. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டா.
2. போகாத இடந்தனிலே போக வேண்டா.
3. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டா.
4. உற்றுரை உதாசினங்கள் சொல்ல வேண்டா.
5. நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டா.
6. நல்லிணக்க மல்லாரோடு இணங்க வேண்டா.
7. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டா.
8. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டா.
9. மாற்றானை உறவென்று நம்ப வேண்டா.
10. தனந்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டா.
11. தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டா.
12. சினந்தேடி அல்லலையும் தேட வேண்டா.
13. சினத்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டா.
14. குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டா.
15. கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டா.
16. கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டா.

17. கோயிலில்லா ஊரில்குடி யிருக்க வேண்டா.
18. தாழ்வான குலத்துடனே சேர வேண்டா.
19. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டா.
20. வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரிய வேண்டா.
21. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டா.
22. முன்கோபக் காரரோடு இணங்க வேண்டா.
23. வழிமறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டா.
24. கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டா.
25. எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டா.
26. சேராத இடந்தனிலே சேர வேண்டா.
27. புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டா.
28. புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டா.
29. திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டா.
30. துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டா.

---

## 4. பழமொழிகள்

1. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
2. கெடுவான் கேடு நினைப்பான்.
3. பாடமேறினும் ஏடது கைவிடேல்.
4. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
5. அகல உழுவதினும் ஆழ உழுவதே நல்லது.
6. கேடுவரும் பின்னே ; மதி கெட்டுவரும் முன்னே.
7. கடன் இல்லாக் கஞ்சி கால் வயிறு போதும்.
8. திக்கற்றவருக்குத் தெய்வமே துணை.
9. நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்[கும்.
10. உழவில் மிகுந்த ஊதியம் இல்லை.

---

# செய்யுட்குறிப்புரை

## 1. ஆத்திசூடி

அறம் - தருமம்
சினம் - கோபம்
கரவேல் - மறைக்காதே
எண் எழுத்து - கணிதம், இலக்கண இலக்கியம்
ஐயம் - பிச்சை
ஒப்புரவு - உலகநடையறிதல்
ஔவியம்-பொருமையானசொல்
ஞயம் - நயம்
நன்றி - உபகாரம்
மன்று – நியாயசபை
கீழ்மை - கீழான குணங்கள்
கைவினை - கைவேலை செய்யும் திறமை
கோதாட்டு - குற்றமுள்ள ஆட்டங்களை
கௌவை – பகைமை
சக்கரநெறி – நீதி நெறி
சித்திரம் - வேடிக்கைப் பேச்சு

## 2. கொன்றை வேந்தன்

தேட்டை - செல்வம்
கைப்பொருள் - செல்வம்
மெய்ப்பொருள் - உண்மைப் பொருள்
திரை - அலை
ஊண் - உணவு
இணக்கம் - நட்பு
அல்லல் - துன்பம்
சீலம் - ஒழுக்கம்
பொல்லாங்கு - தீச்செயல்கள்
தவிர் - நீக்கு
மேழி - ஏர்
வளவன் - அரசன்

## 3. உலகநீதி

புறஞ்சொல்லி - கோள் சொல்லி
உதாசினங்கள் - அலட்சியமான பேச்சுகள்.
இணங்கல் - சேர்தல்
மாற்ருன் - பகைவன்
தனம் - செல்வம்
அல்லல் - துன்பம்
கொற்றவன் - அரசன்
எதிர்மாறு - விரோதமாக
கருமம் - செயல்
திறம்பேசி – தம் திறமையை எடுத்துக் கூறி
துர்ச்சனர் - கெட்ட நடத்தையுடையவர்

## 4. பழமொழிகள்

ஏடு - புத்தகம்
மதி - புத்தி
ஊதியம் - இலாபம்

RSR
1171

# DEIVA TAMIL VACHAKAM

## STANDARD III

BY :

Vidwan **I. NATESA PILLAI**

Publishers :

**V. C. VENKATESAN & CO.,**

MOOR-MARKET : : MADRAS—3

Price As. 7